# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 295 | சனி, ஜுலை 13, 2024 | 17 பக்கங்கள்




## வைத்தியதுறையில் மாபியாக்களை முடிவுக்குக் கொண்டுவர முடியுமா?

பத்திரிகையாளர் **நிக்சன்** செவ்வி





## கலைந்தது செல்வத்தின் கனவு

அகிலன்

## மக்கள் மருத்துவர் அர்ச்சுனா விடயத்தில் அரசாங்கம் எடுக்கும் முடிவே இலவச மருத்துவ சேவையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

சுபேசன்




info@ilakku.org



© 2024 இலக்கு இணையம்

# பெண்களுக்கு எதிரான வன்முறை கவனயீர்ப்பு போராட்டம்



திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்க நகர் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லா தொழிக்க கோரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று கடந்த புதன் கிழமை(10) இடம் பெற்றது .

இதனை கிளிவெட்டி தங்க நகர் பகுதி சமூக மட்ட அமைப்புக்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். அண்மையில் நடேஸ் குமார் வினோதி எனும் யுவதி கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் சடலமாக மீட்கப்பட்டார் இதனை கண்டித்து அப் பகுதியினர் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த கொலையினை மேற்கொண்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் பிணை வழங்கக் கூடாது போன்ற விடயங்களை முன்வைத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் பலர் இதன் போது ஈடுபட்டனர்.

# இரண்டாவது உலகப்போர் காலத்தின் நிலையில் பொருளாதாரம்

## புதிய நிதி அமைச்சர்



இரண்டாவது உலகப்போருக்கு பின்னரான அதாவது 1945 ஆம் ஆண்டு இருந்த பொருளாதார நிலையில் தற்போது பிரித்தானியா உள்ளதாக புதிய நிதி அமைச்சர் ரசேல் றீவ்ஸ் கடந்த திங்கட்கிழமை(8) தெரிவித்துள் ளார்.

பிரித்தானியாவில் இடம் பெற்ற தேர்தலில் தொழிற்கட்சி 412 ஆசனங்களைக் கைப்பற்றி 14 வருடங்களின் பின்னர் ஆட்சியமைத்துள்ள நிலையில் புதிய வெளிவிவகாரத்துறை அமைச்சராக இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாங்கள் ஆட்சியை கைப்பற்றியபோதும், நாட்டின் நிதி நிலமை மோசமாகவே உள்ளது. கடந்த 14 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட பொறுப்பற்ற நிதிக் கொள்கையின் பாரத்தை நாம் சுமக்கவேண்டியுள்ளது. தமது நலன்சார்ந்தே முன்னைய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# கொக்குத் தொடுவாய் புதைகுழியில் மேலும் 3 மனித எலும்புக்கூடுகள்

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மேலும் 3 மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன. புதன்கிழமை(10) நடத்தப்பட்ட அகழ்வாய்விலேயே இவை கண்டறியப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.



முல்லைத்தீவு-கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் மூன்றாவது கட்டமாக தொடரும் அகழ்வில் நேற்று 6ஆவது நாளாக அகழ்வாய்வு தொடர்ந்தது. முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர் தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்புகளின் பங்குபற்றுதலுடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இரண்டாவது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ரஸ்யா தொடர்பில் அமெரிக்காவுக்கு சவுதி விடுத்த எச்சரிக்கை



உக்ரைன்-ரஸ்ய போர் தொடர்பில் ஜி-7 நாடுகள் கையகப்படுத்தி வைத்திருக்கும் ரஸ்யாவின் 280 பில்லியன் டொலர்களை மேற்குலக நாடுகள் உக்ரைனுக்கு வழங்கினால் ஐரோப்பாவில் உள்ள தமது பிணைமுறிகளை விற்றுவிடுவோம் என சவுதிஅரேபியா மேற்குலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்ததால் ஜி-7 நாடுகள் கடும் பதற்றமடைந்துள்ளதாக த புளும் பேர்க் என்ற ஊடகம் கடந்த செவ்வாய்கிழமை(10) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நவாலி இனப்படுகொலையின் நினைவு நாள்



நவாலி புனித பேதுருவானவர் தேவாலயத்தின் மீதும் அருகில் இருந்த முருகமூர்த்தி ஆலயத்தின் மீதும் இலங்கை வான்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான குண்டுவீச்சில் அங்கு தஞ்சமடைந்திருந்த 145 இற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் 29ஆவது ஆண்டு நினைவுதினம் கடந்த செவ்வாய்க்கிழமை(9) நினைவுகூரப்பட்டது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மேலும் ஆயுதங்கள் – ஆரம்பமாகப் போகும் உக்கிர மோதல்கள்



நேட்டோ எனப்படும் வட அந்திலாந்திக் கூட்டமைப்பு உக்ரைனுக்கு அதிகளவான நவீன ஆயுதங்களை வழங்கப்போவதாக வொசிங்டனில் இடம்பெறும் அதன் 75 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு வொசிங்டனில் இடம்பெறும் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு மேலும் ஐந்து தொகுதி பற்றியாட் மற்றும் நசாம்ஸ் வகை வான்பாதுகாப்பு ஏவுகணைகளை வழங்கவும், எப்-16 வகை தாக்குதல் விமானங்களை விரைவாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த செவ்வாய்க்கிழமை(9) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பணிப்புரை.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் மகளிர் மற்றும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில், கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, இரண்டு இல்லங்களையும் உடனடியாக மூடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



மகளிர் இல்லம் ஒன்றில் பொருத்தமற்ற இடத்தில் நிறுவப்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# துருக்கியில் மின்சாரக் கார் நிறுவனத்தை திறக்கும் சீனா



துருக்கியில் மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பில் துருக்கி மற்றும் சீனாவுக்கு இடையில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

சீனாவின் பி.வை.டி எனப்படும் மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனம் உலகின் முன்னனி மின்சாரக்கார் உற்பத்தி நிறுவனமாக திகழ்ந்துவருகின்றது. இந்த நிறுவனம் துருக்கியில் ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான கார் உற்பத்தி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இந்த நிறுவனத்தில் ஆண்டுக்கு 150,000 கார்கள் உற்பத்தி செய்யப்படவுள் ளன.

அங்கு உற்பத்தி செய்யப்படும் கார்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள்

## அர்ச்சுனா ஏற்படுத்திய தீப்பொறி

*'மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள் வெற்றியை அவர்கள் பெற்றுத் தருவார்கள்' என மாவோ கூறிய கருத்தை தான் சாவகச்சேரி வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் செய்திருக்கின்றார்.*

*சாவகச்சேரி வைத்தியசாலை முன்றலில் இடம் பெற்ற மக்கள் புரட்சி சில செய்திகளை எமக்குச் சொல்லியிருக்கிறது.*



*ஒரு படித்த மிக உயர்வான இடத்தில் இருக்கின்ற தமது சொந்த சமூகத்தால் கடந்த காலங்களில் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதை அறிந்தமையினால் ஏற்பட்ட அதிருப்தியின் விளைவாக உருவானதே இந்த மக்கள் புரட்சி.*

*அதிகார துஸ்பிரயோகங்கள் - அக்கறையீனங்கள் - உயர் அதிகாரிகளை நாம் ஏன் பகைக்கவேண்டும் என்ற மௌனங்கள், போன்றவை எம் மத்தியில் தாராளமாக இருக்கின்றது என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.*

*சாவகச்சேரியில் 25 வைத்தியர்கள் கடமையாற்றுகிறார்கள்(கடமைக்காக போய் வந்திருக்கிறார்கள்) என்ற செய்தி அந்தப் பிரதேச மக்களை அதிர்ச்சியடைய செய்திருக்கிறது. ஏனெனில் பெரும்பாலான நேரங்கள் அங்கு வைத்தியர்கள் கடமையில் இருப்பதில்லை என்பது அவர்களின் அனுபவம்.*

*கடந்த 15 வருடங்களாக கடமையை செய்யத் தவறிய இந்த வைத்தியர்களால் இழக்கப்பட்ட உயிர்களுக்கு யார் பொறுப்புக்கூறப்போகின்றனர்?*

*மக்களின் பணத்தில் படித்து மக்களின் பணத்தில் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு தமது சொகுசான வாழ்வுக்காக மக்களை படுகொலை செய்தவர்கள் தண்டனையில் இருந்து தப்புவது என்பது ஒரு நாட்டின் அல்லது அந்த இனத்தின் சாபக்கேடாகவே பார்க்கப்படும்.*

*மக்களுக்கான சேவையில் நிர்வாகம் விடுகின்ற தவறுகளை சுட்டிக்காட்டிய ஒருவனை ஒட்டு மொத்த மருத்துவத்துறைக்கும் பொறுப்பான நிர்வாகம் துரத்தியது என்பதும் அவருக்கு எதிராக பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளப்போகின்றோம் என அறிக்கை வெளியிட்டதும் அவர்கள் தாமாகவே முன்வந்து தாம் எல்லோரும் திருடர்கள் என்பதை ஒப்பக்கொண்டதாகவே அர்த்தமாகும்.*



*கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதனின் முகப் புத்தகப் பதிவும் பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. முல்லைதீவு, மன்னார் ஆகியவற்றின் மாவட்ட*

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

இலக்கு

## கறுப்பு யூலை ஈழத்தமிழின அழிப்பின் 41வது ஆண்டில் ஈழத்தமிழர் பொருளாதாரப் பலமே இறைமையை மீட்குமென உணர்வோம்

காலனித்துவ பிரித்தானியா கைப்பற்றிய தங்கள் இறைமையின் அடிப்படையில் தங்களுக்கான தன்னாட்சியை ஏற்படுத்தி பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் ஈழத்தமிழர்கள் மீளப் பெறுதல் என்கின்ற ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை இன்று அனைத்துலக வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகளால் சிங்களவர்களுக்குச் சார்பான முறையில் சிங்கள பௌத்த நாட்டில் வாழும் சமுகமொன்றின் பிரச்சினையென திரிபுபடுத்தப்பட்டுள்ள நிலையில் சிறிலங்காவால் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈழத்தமிழரின் பொருளாதாரத்தைச் சிதைக்கவும் மனித வலுவை அழிக்கவும் வாழ்வாதாரமான நிலத்தைக் கடலை வானை ஆக்கிரமிக்கவும் சிறிலங்கா நடாத்திய 1983ம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கத்தின் ஈழத்தமிழின அழிப்பான "கறுப்பு யூலை"யின் 41வது ஆண்டு நினைவேந்தலில் தாயகத்திலும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் ஆர்வமுடன் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். 41 ஆண்டுகளாக தண்டனை நீதியைச் சிறிலங்காவோ பரிகார நீதியை ஈழத்தமிழர்களோ அடைய முடியாத வகையில் ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்கள் தங்கள் தன்னாட்சியுடன் வாழ்வதற்கான வாழ்வை மீளுற்பத்தி செய்வதைப் பிரிவினை என்றும் தங்களின் உயிர் உடைமைகள் நாளாந்த வாழ்வு அழிப்பில் இருந்து தங்களைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகளைப் பயங்கரவாதம் எனவும் சிறிலங்காவும் அதன் ஆதரவு நாடுகளும் 41 ஆண்டுகளாகத் திரிபுவாதம் செய்து ஈழத்தமிழர்களுக்கு அனைத்துலகச் சட்டங்களின் கீழ் நீதி கிடைப்பதையோ, வெளியக தன்னாட்சி அடிப்படையில் தீர்வு கிடைப்பதையோ தடுத்து வருகின்றன. பொருளாதாரத் தேவைக்கு மட்டுமல்ல இந்தத் தேவைக்கும் சிறிலங்காவுக்கு கூட்டாண்மைகளும் பங்காண்மைகளும் தேவையாக உள்ளது.

கடந்த வாரத்தில் சிறிலங்காவில் பாரத் சிறிலங்கா கூட்டாண்மையும், அமெரிக்க சிறிலங்காப் பங்காண்மையும் சிறிலங்கா அரசாங்கத்தின் இறைமையின் மேல் மேலாண்மை செய்யும் நடைமுறை நிகழ்வுகளைக் காணக் கூடியதாக உள்ளது. பாரத் சிறிலங்கா கூட்டாண்மையின் கீழ் கடந்தவார நிகழ்வாக இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சின் ஆலோசகர் அனிஷ்குமார் தலைமையிலான இந்திய உயர் மட்டக்குழுவொன்று கொழும்புக்கு வருகைதந்து பிரதமர் மோடியின் 'கதி சக்தித் திட்டம்' எனப்படும் ஒருங்கிணைந்த திட்டமிடல், ஒத்திசைவான நடைமுறைப்படுத்தல்கள், திட்டக் கண்காணிப்பு குறித்து தரவுகள் அடிப்படையிலான முடிவுகளை எடுப்பது குறித்து கலந்துரையாடி உள்ளது. சிறிலங்காவின் துறைமுகங்கள் கப்பல் துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சிறிலங்காப் பிரதமரின் செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி செயலகத்தில் உட்கட்டமைப்புத் திட்டங்களைக் நெறிப்படுத்தும் உயர் அதிகாரிகள், நிதி அமைச்சின் திணைக்களங்கள் பலவற்றினதும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றமை பாரத் சிறிலங்கா கூட்டாண்மையின் செயல்படுத்தலை பரிசோதித்து விரைவுபடுத்தும் இந்திய செயற்பாடாக காணப்பட்டது.

இந்து மாக்கடலில் உள்ள 'அபானாசி நிக்கிட்டின்' கடல்மலைப் பகுதியில் உள்ள கோபல்ட் கனிமம் குறித்த ஆய்வில் ஈடுபடுவதற்கு இந்தியா ஜமேக்காவில் உள்ள அனைத்துலக கடற்படுக்கை அதிகாரசபையிடம் அனுமதி கோரியதைச் சிறிலங்கா எதிர்த்து இப்பகுதி தனது விரிவாக்கப்பட்ட கண்ட அடுக்குக்குள் அமைவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் கண்ட அடுக்குகளின் வரம்புகள் குறித்த ஆணைக்குழுவின் முடிவு அறிவிக்கப்படும்வரை இந்தியாவுக்கு அனுமதி அளிக்கக் கூடாதென அறிவித்துள்ள சூழலிலும், எந்த நாட்டு ஆய்வுக்கப்பலும் சிறிலங்காவின் துறைமுகங்களுக்கு சனவரி மாதம் முதல் வரலாம் என இந்திய நலனுக்கு எதிரான முடிவை அறிவித்துள்ள நிலையிலும் பாரத் சிறிலங்கா கூட்டாண்மையைப் பயன்படுத்தி சிறிலங்காவின் கடல்-நில-வான் இணைப்பு உடன்படிக்கைகளை வேகப்படுத்த முயல்வதன் பின்னணியிலேயே இந்தியாவின் சிறிலங்கா மீதான மேலாண்மை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரம் ரஷ்யாவுக்குச் சென்ற மோடி சென்னையிலிருந்து ரஷ்யாவின் விளாடிவொஸ்ரொக் (Vladivostok) 5647 கடல்மைல் நீளக் கடற்பாதை அமைப்பின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் தலை மன்னார் காங்கேசன்துறை கடலிணைப்பு இராமேஸ்வரம் பாம்பன் பாலம் தரையிணைப்பு திருகோணமலைத்துறைமுக கொழும்புத்துறைமுக இணைப்புக்கள் பலாலி திருச்சி விமான இணைப்புக்கள் இந்தியாவின் சமகாலத்தேவையாகின்றது. காங்கேசன்துறை கொழும்பு துறைமுக இணைப்புக்கள் வழி சீனாவுடன் வரலாற்றுத் தொடர்புடைய மலேசிய சிங்கப்பூர் உட்பட்ட தென்கிழக்காசிய நாடுகளின் கடற்பாதை ஊடாக இந்தியா தனக்கான கடற்பலத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் பலமாக உள்ளது. அதே வேளை சீனாவுக்கு இந்தியாவின் தென்னிந்திய படைபல இருப்புக்களை ஆயுதக் குதங்களை வேவு பார்ப்பதற்கு ஈழத்தமிழர் தாயகக் கடற்பரப்புள் தன்னை நிலைநிறுத்துவது முக்கிய தேவையாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே சீனாவின் ஆய்வுக்கப்பலுக்கு விதிக்கப்பட்டிருந்த ஒருவருடத் தடையை சனவரியில் அது முடிவடைவதுடன் நீக்கச் சிறிலங்கா முடிவுசெய்துள்ளது. இந்நிலையில் சிறிலங்காவின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மீக தளங்கள் அனைத்திலும் இந்திய மேலாண்மை சமகாலத்தின் தவிர்க்க இயலாத இந்தியத் தேவையாகிறது. இந்தத்தேவைக்குள் ஈழத்தமிழர் வலுவான சிவில் சமுகப் பொருளாதாரக் கட்டமைப்பு மூலமே தங்களுடைய பொருளாதாரப் பலத்தை இந்நாடுகளுக்கு வெளிப்படுத்தி உரையாடல்கள் வழி ஈழத்தமிழர் இறைமையைப் பாதுகாக்க முடியும்.

இதற்கிடையே அமெரிக்க சிறிலங்காப் பங்காண்மையை வலுப்படுத்தி அமெரிக்கா தனது இலங்கையின் இந்து மாக்கடல் இருப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளது. பொருளாதாரம், பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஜனநாயகம், நல்லிணக்கம், மனித உரிமைகள், காலநிலை மாற்றம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு, மக்களுக்கு இடையிலான தொடர்பு என்னும் பத்து தலைப்புக்களில் 5வது அமெரிக்க சிறிலங்காப் பங்காண்மைக் கூட்டம் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அரசியல் விவகாரப் பதில் அமைச்சர் ஜோண்பஸ் மற்றும் சிறிலங்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அருணி விஜயவர்த்தனா இடையே சிறிலங்காவின் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் 12.07.24 இல் இடம்பெற்றுள்ளது. இந்நேரத்தில் புலம்பெயர் தமிழர்களுக்கான பொருளாதாரக் கட்டமைவு ஒன்று பலமாக அமைந்தால்தான் ஈழத்தமிழர் இறைமையைப் பேச்சுக்கள் வழி பாதுகாக்கலாம். மேலும் பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்ராமர் அவர்கள் நேட்டோவின் 75வது ஆண்டு நிறைவு ஒன்று கூடலில் வாசிங்டனில் உக்ரேனுக்கு ஆதரவு தெரிவிப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் "நேட்டோ பாசிசத்தை தோற்கடித்த தலைமுறையினால் தோற்றுவிக்கப்பட்டது. நேட்டோ எங்களின் பலம் மட்டுமல்ல எங்களின் விழுமியங்களின் பலம். நாம் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இந்தச் செய்தியை வெளிப்படுத்த வேண்டும்" என்று கூறியமை விழுமியங்களைப் பாதுகாப்பதை முன்வைத்துக் கூட்டாண்மைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக்கியது. அவ்வாறே பிரித்தானியாவின் ஆயுதப்படைகளின் அமைச்சர் லூக் பொலாட் அவர்கள் "பாதுகாப்புக்கான பங்களிப்பு மிக முக்கியம். அதே வேளை அப்பங்களிப்புக்கான பொருளாதாரமும் முக்கியம். இரண்டும் ஒரே நேரத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டும்" என்று கூறியுள்ளமை பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தைத் தெளிவுபடுத்தியது. ஈழத்தமிழர்களும் தங்களின் பொருளாதாரத்தைச் சிதைத்த கறுப்பு யூலை மாதத்தில் ஈழத்தமிழர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சிவில் சமுகத்தின் அமைப்புக்களின் ஒருங்கிணைப்பை உருவாக்க உறுதியெடுத்தாலே அந்தப் பொருளாதாரப் பலத்தால் ஈழத்தமிழரின் இறைமை மீட்கப்படும் என்பதை வலியுறுத்திக் கூற இலக்கு விரும்புகிறது.

**ஆசிரியர்**

# உலகம் அறியும் எம் தற்கொடையாளர்கள் நீங்களென்று

"பெரிய புலியின் பெரு நிழலாய்...."
காற்றிடைவெளியிற் கண்சிமிட்டி நீர்
கதைகள்பேசும் அரவொலி கேட்டுக்
கானமிசைக்கிறது எம் காடு! ஆங்கே
காத்துக் கிடக்கிறது நம் நாடு!

அக்கினிக் குஞ்செனச் சிறகடித்து
ஆறாப் பெரும் தீயைப் பிரசவித்து
திக்கெனப் பகைக்குத் திகிலூட்டித்
திசையெல்லாம் ஒளியைப்
படைத்தவரே!

கடலிலும், தரையிலும், காற்றிலும்
கந்தக தீபங்கள் ஏற்றிவைத்து
உடலெனும் கூட்டினின்றுயிர் பிரித்து
உன்னதம் காணச் சென்றது
தூரமோ?

போனதும் போனீர்
போகிறோமென்று
நம் ஊர்வரும் ஒருநாள் என்றுரைத்து
போகா இட மெல்லாம்
போய்முடிந்தும்
நாம் போகவோர் இடமின்றிக்
கிடக்கின்றோம்!
மாலைகள் அணியா வீரர்கள்
தோள்கள்
மண்ணிலும் அடங்காக்
கந்தகமேனியர்
காலையும், மாலையும் கடும்
தவம்புரிந்து
காவியம் எழுதிய கரும்புலி நாயகர்!

காரிருள் விலக்கும் கரும்புலி வீரம்
கரிய உடையுள் கருணையின் ஈரம்
யாரிவரென்றுமை வியந்திடும் காலம்
யாரிவர் தமிழரென்றறிந்திடும் ஞாலம்!

'பெரிய' புலியின் பெருநிழலாய்
கரிய புலிகள் உறுமல் முழக்கிச்
சிறியர் செயலில் சினங்கொண்டு
சீறியெழுந்த சீரியரே!

அறியும் ஒருநாள் இவ்வுலகம்
நீங்கள் யாவரும் யாரென்று
தெரியும் உண்மை உலகறிய எம்
'தற்கொடையாளர்கள்' நீரென்று!

—காந்தள்—



# கலைந்தது செல்வத்தின் கனவு

அகிலன்

அண்ணன் எப்ப சாவான்? திண்ணை எப்ப காலியாகும்? என்ற வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்திருக் கின்றன. அதற்காக தவறான நேரத்தில் தவறான காய்களை, கள நிலைமைகளை மதிப்பிடாமல் அவர்கள் நகர்த்திக்கொண்டிருப்பதுதான் நகைச் சுவை.

கடந்த சுமார் ஒன்றரைத் தசாப்த காலமாக தன்னை யாரும் அசைக்க முடியாது என்ற வகையில் செயற்பட்டுக்கொண்டிருந்த சம்பந்தனின் மறை வைத் தொடர்ந்து, அவரது பதவியைப் பெறு வதற்கான காய் நகர்த்தல்களை கடந்த வாரங்களில் காணமுடிந்தது.



சம்பந்தரிடம் இரண்டு பதவிகள் இருந் தது. ஒன்று திருமலை மாவட்ட எம்.பி. பதவி. மற்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் பதவி, இந்த இரண்டு பதவி களையும் அவர் வினைத் திறனுடன் செய்தாரா என்பதையிட்டு இந்தக் கட்டுரையில் நாம் ஆராயவில்லை.

சம்பந்தனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தேர்தல் சட்டங்களின் படி அவருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குக ளைப் பெற்ற சண்முகம் குகதாசனுக்குக் கொடுக்கப் பட்டது. அதில் எந்த சர்ச்சையும் இல்லை.

திருமலையில் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே தன்னுடைய கனடா குடியுரிமையைத் துறந்துவிட்டு திருமலையில் கடந்த தேர்தலை சந்தித்து 16,000 க்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றவர் அவர். பதவி இல்லாத நிலையிலும், மக்களுடன் மக்களாக நின்று பணியாற்றியவர்.

சென்னையிலிருந்து தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்துடனும் பணிபுரிந்த அனுபவம் அவருக்குள்ளது. அதனால், திருமலை மக்கள் எதிர்கொள்ளும் சிங்கள ஆக்கிரமிப்புக்கள், தமிழ் மக்களின் இடப்பெயர்வுகள் என்பன அவரது அக்கறைக்குரிய விடயங்களாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### தமிழ்க் கூட்டமைப்பு

சம்பந்தரின் மறைவால் வெற்றிடமான நாடாளு மன்றக் குழுவின் தலைவர் பதவிதான் இப்போது சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. நாடாளுமன்றக் குழுவின் தலைமைப் பதவி என்பது மிகவும் முக்கியமானதும், சக்தி வாய்ந்ததுமாகும். அதனை இலக்குவைத்து ரெலோ முன்னெடுத்த முயற்சிகள் தமிழரசுக்கட்சியால் முறியடிக்கப்பட்டிருக்கின்றது. தமிழரசு இவ்வாறு செயற்படும் என்பதைத் தெரியாமல் ரெலோ இருந்தது என்பதுதான் இதில் ஆச்சரியமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக் கப்பட்ட பின்னர் அதன் தலைவராக சம்பந்தன் ஒரு போதும் இருக்கவில்லை. ஏனெனில் அது ஒரு தனிக் கட்சி அல்ல. அதன் நாடாளுமன்ற கூழுவின் தலைவராகவே அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். விடுதலைப் புலிகளின் விருப்பத்தின்படிதான் இந்தத் தெரிவும் இடம்பெற்றது. ஆனால், நாடாளுமன்றக் குழுவின் தலைவர் என்பது கூட்ட



மைப்பின் தலைவராகப் பார்க்கப்பட்டது.

2004 இல் கிளிநொச்சி விடுதலைப் புலிக ளின் அரசியல் தலைமை செயலகத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், விடுதலைப் புலிகள் தலைவர் உள் ளிட்ட தளபதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இனிமேல் சகல தேர்தல்களிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 2004, தொடக்கம், நாடாளுமன்ற தேர்தல்கள், மாகாணசபை தேர்தல்கள், உள்ளூ ராட்சி சபை தேர்தல்கள் அனைத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ தேர்தல் கட்சியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், அதன் வீட்டுச் சின்னமும் செயல்படும் என 2004, ஏப்ரல் மாதம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர். எல்.எப். என்பன அதிலிருந்து பின்னர் வெளி யேறியிருந்தன. ரெலோ, புளொட், தமிழரசு என் பனதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கடந்த வருடம் வரை இருந்து வந்தன.

### வெளியேறிய தமிழரசு

கூட்டமைப்பு என்று செயற்பட்டுவந்தாலும், தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கம்தான் அங்கு இருந்தது. மக்கள் மத்தியில் தமக்குத்தான் அதிக செல்வாக்கு இருப்பதாகக் கணித்த தமிழரசுத் தலைமை, கடந்த வருடம் உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட போது, தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இது தெளிவான பிளவை ஏற்படுத்தியது.



ரெலோ, புளொட் என்பன ஈ.பி.ஆர். எல்.எப், ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி என்பன இணைந்து ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி, தமிழரசுக் கட்சியுடன் இனி ஒட்டும் இல்லை உறவும் இல்லை என அறிவித்தன. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களும் இந்த அடிப்படையில்தான் தாக் கல் செய்யப்பட்டிருந்தன. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியாகவும் இருந்தது.

இந்தப் பிளவுடன் சம்பந்தப்பட்ட மற் றொரு முக்கியமான விடயமும் கவனிக்கப்பட வேண்டும். தமிழரசுக் கட்சியும், ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டமைப்பும் தனித் தனியாகச் செயற்படத் தொடங்கிய பின்னர், 2004 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்து போய்விட்டது என்பதுதான் அது.

இவ்வளவு பிளவுகளும் இடம்பெற்ற பின்னர்தான் சம்பந்தன் வகித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைமைப் பதவியை தமது தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ரெலோ அமைப்பு தமிழரசுக் கட்சியிடம் முன்வைத்திருக்கின்றது. இதற்கு புளொட்டும் ஆதரவு தெரிவித்தது.



2015 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் "நல்லாட்சி"யை மைத்திரியும், ரணி லும் அமைத்த போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது. நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் பதவி செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கப்பட்டது. இது பிரதிச் சபாநாயகருக்கு அடுத்த நிலையில் உள்ள முக்கிய பதவியாகும். சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் அவர் உள்ளார் என்ற அடிப்படையில்தான் இந்தப் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று - செல்வம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆரம்ப உறுப்பினர். இரண்டு-கூட்டமைப் பில் தமிழரசுக் கட்சிக்கு அடுத்ததாக அதிக ஆசனங்க ளைக் கொண்ட கட்சியாக ரெலோ இருந்தது. அதனால்தான் அந்தப் பதவி செல்வத்துக்கு வழங்கப்பட்டது.

இப்போது நாடாளுமன்றக் குழுவின் தலைமைப் பதவியை ரெலோ உரிமை கோரும் இப்போதும் அதே காரணங்களைத்தான் சொல் கிறது. ஆனால், இப்போது கள நிலை மாறி விட்டது என்பதை ரெலோவின் பதவி ஆசை மறைத்துவிட்டதா?

### தமிழரசின் எதிர்வினை

ரெலோ என்னதான் கோரினாலும், புளொட் எப்படித்தான் ஆதரவளித்தாலும் தீர்மானிக்க வேண்டியது தமிழரசுக் கட்சிதான். காரணம் அந்தக் கட்சியின் பெயரிலும், சின்னத்திலும்தான் கூட்டமைப்பு கடந்த தேர்தலை சந்தித்தது. இரண்டாவது காரணம், கடந்த தேர்தலில் கூட்ட மைப்புக்கு கிடைத்த பத்து ஆசனங்களில் ஆறு தமிழரசுக் கட்சி வசம் இருக்கின்றது. ஆக, தீர்மானிக்கும் சக்தி அவர்கள்தான்!

இந்த இரண்டையும்விட முக்கியமான காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது செயலிழந்து போயுள்ளது. செல்வத்துக்கு இந்தப் பதவியைக் கொடுக்க வேண்டுமானால், மீண்டும் கூட்டமைப்புக்கு உயிர் கொடுக்க வேண்டும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# வைத்தியதுறையில் மாபியாக்களை முடிவுக்குக் கொண்டுவர முடியுமா?



**சாவகச்சேரி மருத்துவமனையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தியதையடுத்து வைத்தியர் அர்ச்சுனாவுக்கு ஆதரவாக பாரிய மக்கள் கிளர்ச்சி ஒன்று உருவாகி, அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. இச்சம்பவத்தையடுத்து மருத்துவத்துறையில் காணப்படும் குறைபாடுகள் ஒவ்வொன்றாக அம்பலமாகிவருகின்றன. இவை தொடர்பில் பத்திரிகையாளரும் ஒருவன் செய்தித் தள ஆசிரியருமான அ.நிக்ஸன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக இடம்பெற்ற மக்கள் போராட்டம் குறித்த உங்களுடைய பார்வை என்ன?**

மக்களிடம் நீண்டகாலமாகக் காணப்பட்ட விரக்தியின் வெளிப்பாடுதான் இது. சாவகச்சேரி வைத்தியசாலை ஒரு மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தக்கூடிய அளவுக்கு அங்கு வசதிகள் இருந்திருக்கின்றன. புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை சரியாகச் செயற்படுத்தப்படவில்லை. நோயாளர்கள் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். புதிதாக வந்த வைத்தியர் அர்ச்சுனா இந்தப் பிரச்சினைகளை வெளிப்படுத்தி அவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கு முயற்சித்திருக்கின்றார். இது தொடர்பான தகவல்களை அவர் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டிருக்கின்றார். அதனைப் பார்த்த மக்கள்தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். மக்களின் உணர்வு உண்மை.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மக்களில் பலருக்கும் வைத்தியர் அர்ச்சுனாவைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மக்களில் பலர் அவருடைய முகத்தையே தமக்குத் தெரியாது என்று கூறியிருக்கின்றார்கள். ஆக, மக்கள் தமது பிரச்சினைகளுக்காகத்தான் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். அவர் சமூக வலைத்தளங்களில் பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருக்காவிட்டால் இந்தப் பிரச்சினைகள் மக்களுக்குத் தெரியவந்திருக்காது.

வைத்தியர் அர்ச்சுனா சில வாரங்களுக்கு முன்னர்தான் பதவியேற்றிருந்தார். அந்த குறுகிய காலத்துக்குள் மக்களுக்கு அவர் பரிட்சயமாகி இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அதனால், சமூக வலைத்தளங்களில் இந்த மோசடிகளை அவர் வெளிப்படுத்தியதால், மக்கள் செயற்பட்டிருக்கின்றார்கள். அங்கு இவ்வாறான தவறான போக்குகள் இருந்திருக்கின்றது என்பது உண்மை. அது ஏற்கனவே தெரிந்த ஒரு விடயமும் கூட. அதனால், அதனை அவர் துணிச்சலுடன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

**இந்த விவகாரம் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்திருந்தது. சுகாதரத்துறை மீதான அதிகாரங்களை மத்திய அரசு தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்திருப்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகக் கூறப்பட்டது. இது குறித்த உங்கள் பார்வை என்ன?**

மாகாணசபைகளின் அதிகாரங்களை கொழும்பு எடுத்துக்கொள்கின்றது என்பது நீண்ட காலக் குற்றச்சாட்டு. கொரோனா காலத்தில் சுகாதாரத்துறை தொடர்பில் மாகாண சபைகளுக்கு இருந்த பல அதிகாரங்களை மத்திய அரசு எடுத்திருக்கின்றது. அதனுடன் தொடர்புபட்டதாகத்தான் இதனையும் பார்க்க வேண்டும். அர்ச்சுனாவின் நியமனத்தை கொழும்புதான் செய்திருக்கின்றது. வடமாகாண சபையின் சம்மதம் இன்றி இந்த நியமனம் இடம்பெற்றிருக்கின்றது.

அது எப்படி இருந்தாலும் பிரச்சினைகள் இருந்துள்ளன என்பது உண்மை. வைத்தியசாலை சரியாக இயங்கவில்லை. வைத்தியர்கள் இருப்பதில்லை போன்ற குற்றச்சாட்டுக்கள் உண்மை. ஆனால், இந்த நியமனம் தொடர்பாக கேள்வி எவ்வாறு வருகின்றதென்றால், மாகாணசபைகளின் அதிகாரத்தை கொழும்பு எடுத்திருக்கிறது என்பது தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பலவீனங்கள் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டபோது, அதற்கு எதிராக அவர்கள் குரல் கொடுத்திருந்தாலும், அதனைத் தடுப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் எதனையும் அவர்கள் செய்யவில்லை. அதேவேளையில், வடக்கு கிழக்கில் உள்ள உயர் அதிகாரிகளும் பெரும்பாலும் கொழும்புடன் பணியாற்றுவதைத்தான் விரும்புகின்றார்கள். தங்களுடைய சலுகைகளுக்காகவும், வசதிகளுக்காகவும் அவர்களில் பலர் அவ்வாறிருப்பதைத்தான் விரும்புகின்றார்கள். மத்திய அரசின் செயற்பாட்டுக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது.

சாவகச்சேரி வைத்தியசாலை புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது, மக்களுக்கு வினைத்திறனுள்ள முறையில் செயற்படவில்லை என்ற காரணத்தினால்தான் மக்கள் எழுச்சி கொண்டிருக்கின்றார்கள். அதனால், குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும்.



## பத்திரிகையாளர் நிக்சன் செவ்வி

பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டும்.

**வைத்தியர் அர்ச்சுனா பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். நாடாளுமன்றத்திலும் இவை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவை தொடர்பில் விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாமா?**

இவை குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படலாம். ஆனால், அவை உரிய முறையில் இடம்பெறும் என எதிர்பார்க்க முடியாது. இந்த ஊழல், மோசடிகள் அனைத்துமே இலங்கை அரசின் கட்டமைப்பாக மாறியிருக்கிறது. எனவே, வடமாகாணத்தில் உள்ள சில வைத்தியர்கள் மட்டும்தான் இதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. அவர்கள் சிலசமயங்களில் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஈடுபட்டிருக்க முடியும். அல்லது வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால், இதன் அனைத்தினதும் பின்னணி அரசியல்தான். அதாவது, கொழும்பை மையமாகக்கொண்ட அரசியல்தான்.

ஆகவே, ஒரு நியாயமான விசாரணை இடம்பெறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், சாவகச்சேரி வைத்தியசாலையில் மட்டுமன்றி, வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள வைத்தியசாலைகளில் இருந்தும் அவ்வாறான

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# பண்ணையாளர்களின் போராட்டத்தினை குழப்ப மறைமுக நடவடிக்கை

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் கடந்த 300வது நாளை யும் தாண்டிய வகையில் போராட்டத்தினை முன் னெடுத்துவருகின்றனர். தமது நிலத்தினை மீட் பதற்காக பண்ணையாளர்கள் சித்தாண்டியில் மட்டக்களப்பு – கல்முனை வீதியில் கூடாரமிட்டு தொடர்ச்சியான போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.



சுமார் ஒரு வருடத்தினை எட்டப்போகும் இவர்களின் நில மீட்பு போராட்டம் என்பது அனைத்து தரப்பினராலும் கைவிடப்பட்ட நிலை யில் பண்ணையாளர்கள் மட்டுமே போராடிவரும் நிலைமையினை காணமுடிகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரை யில் தொடர்ச்சியாக நில அபகரிப்புகள் எல் லைப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. பண்ணையாளர்களின் நிலங்களை அபகரித்தன் காரணமாக ஒரு பகுதி தொடர்பில் வெளிப் படுத்தப்பட்டதன் காரணமாக போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் சத்தமின்றி குடி யேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரை யில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள பிரதி நிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்படும் ஒரு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினையும் இல்லாமல்செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதே போன்ற ஒரு நிலையே அம்பாறை மாவட்டத்திலும் காணப்படுகின்றன.



இந்த நிலைமை யுத்தம் நிறைவடைந்த தன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நிலைமையாகும். யுத்தம் நிறைவுபெற்ற கையுடன் சிங்கள பேரினவாத அரசுகள் தமிழர் நிலப்பகுதியை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றன.

அதனைத் தடுப்பதற்கோ அல்லது அதற் காக போராடுவதற்கோ அல்லது அதற்கு குரல் கொடுப்பதற்கோ திராணியற்ற நிலையில் தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். வெறு மனே ஆர்ப்பாட்டம் செய்வதாலும் பாராளு மன்றத்தில் பேசுவதாலும் தமது செயற்பாடு முடி வடைந்துவிடுகின்றது என்ற நினைப்பே இன்று தமிழர்கள் இந்த நிலைக்கு செல்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரை யில் இதுவரையில் தமிழர்களின் எல்லைகளை பாதுகாப்பதற்கு எந்த நடவடிக்கையும் முன் னெடுக்கப்படவில்லை. குறைந்தது எல்லைகளை அடையாளப்படுத்துவதற்கான செயற்பாடுகள் கூட முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலைமைகள் என்பது சிங்கள பேரினவாதத்திற்கு தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்திவருகின்றது.



நாங்கள் இலக்கு வார இதழ் ஊடாக பல் வேறு விடயங்களை வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் அதனை கடந்துசெல்லும் நிலைமையே காணப்படுகின்றது. இதன்காரணமாகவே இன்று மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையா ளர்கள் 300வது நாளையும் கடந்து எந்தவித தீர்வும் இன்றி போராடும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

இன்று மயிலத்தமடு பண்ணையாளர்களின் போராட்டத்தினை முடிவுறுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்க ளின் போராட்டம் என்பது இன்று சர்வதேசம் வரையில் பேசுபொருளாக மாற்றம் அடைந்துள் ளதன் காரணமாக அந்த போராட்டத்தினை முடிவுக்கு கொண்டுவருவதற்கு கடும் பிரயத் தனங்களை சிங்கள அரசு முன்னெடுத்து வரு கின்றது.

அதற்காக பலர் விலைபேசப்பட்டு கள மிறக்கப்பட்டுள்ள நிலையின் மத்தியில் இந்த 300வது நாளை கடந்து பண்ணையாளர்கள் போராடி வருகின்றனர்.

கால்நடைகளுக்கான உணவுக்குப் பயன் படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக் கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இது புல் வளரக்கூடிய வளமான பூமியெனவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



300 நாட்கள் தொடர் போராட்டத்தின் போது சிங்கள விவசாயிகள் மேய்ச்சல் நிலங்க ளில் களைக்கொல்லிகளை வீசியதாலும், மேய்ச் சல் நிலங்களுக்கு தீ வைப்பதாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உணவின்றி உயிரி ழந்துள்ளதாக மயிலத்தமடு, மாதவனை பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டியுள்ளார். "இந்தப் போராட் டம் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 1,075 மாடுகள் உயிரிழந்துள்ளன. சட்டவிரோதமாக குடியேறியவர்களின் ஆயுதங்களால் 375 மாடுகள் பலியாகியுள்ளன. இதுவரை இழப்பீடு எதுவும் கிடைக்கவில்லை."

மேய்ச்சல் நிலத்தில் 160 சிங்களக் குடும் பங்களைச் சேர்ந்த 300 பேர் அத்துமீறி வாழ்ந்து வருவதாக அவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

பாற்பண்ணையாளர்களின் பிரச்சினைகளு க்கு தீர்வை வழங்குவதாக நாட்டின் தலைவரும் அரச அதிகாரிகளும் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என சீனித்தம்பி நிமலன் குற்றஞ்சாட்டுகின்றார்.

"ஜனாதிபதியும், மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் சந்தித்து வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாவட்ட செயலாளர் அரசாங் கத்தின் வாக்குறுதியை நம்புங்கள் என்கிறார். மொத்த நிலத்தில் 10,000 ஹெக்டேயரை மேய்ச் சலுக்குக் கேட்டிருந்தோம். அதன் பின்னர் குறைந் தது 7,000 ஹெக்டேயரைக் கேட்டோம். ஆனால் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 3,000 ஹெக்டேயர் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களுக்கு தீர்வு வழங்கும் நோக்கம் என்னும் போர்வையைப் போர்த்திக்கொண்டு மகாவலி அபிவிருத்தி திட்டம் என்னும் பெயரில் இப்பகுதியில் திட்டமிட்ட வகையான குடியேற்றத்தினை செய்வதற்கு அரசு திட்டமிட்ட செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளது.



இதற்காக சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் என்று கூறிக்கொண்டு தமிழர் தரப்புக்குள் ஊடுருவியுள்ளவர்களை தமக்கு சாதக நிலைமைக்காக பயன்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. பண்ணை யாளர்களின் போராட்டத்தினை நிறுத்துவதற்கும் தமது செயற்பாடுகளை முன்நகர்த்துவதற்கும் அரசாங்கம் மிக திட்டமிட்ட வகையான செயற் பாடுகளை முன்னெடுத்துள்ளதை அறியமுடிகின் றது.

மயிலத்தமடு, மாதவனை பகுதியென்பது மிகவும் வளமான பகுதி. பல வருடமாக மாடுகள் கட்டப்பட்ட பகுதி. அப்பகுதியில் குடி யேற்றங்களைசெய்து மட்டக்களப்பு மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக அப்பகுதியில் பண்ணையாளர்களுக்கு 3000 ஹெக்டெயர் நிலங்களை கால்நடைகளுக்கு ஒதுக்குவதாக அரசாங்கம் கூறுகின்றது. இதுவரை காலமும் சுமார் 11ஆயிரம் ஹெக்டெயரில் மாடுகளை மேய்த்தவர்களுக்கு தற்போது வெறும் 3000 ஹெக்டெயர் வழங்க அரசாங்கம் முன் வந்துள்ளதானது மிகுதியாகவுள்ள பகுதிகளில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# படுவேகமாக மாறிவரும் உலகில் பொருளாதார ஒருங்கிணைப்பு ஈழத்தமிழரின் இறைமைக்கான பாதுகாப்புக் கவசமாக மாற்றப்பட வேண்டிய நேரம்

சனநாயகத்தின் அரசியல் ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

அனைத்துலக அரசியல் புதிய மாற்றங்களை நோக்கி வேகமாகச் செல்வதை வெளிப் படுத்தும் வாரமாகக் கடந்த வாரம் அமைந்துள்ளது. ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் நிற அரசியலுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதிதீவிரவாத வலதுசாரிகளுக்கு உயிர்ப்பைக் கொடுத்து ஐரோப்பிய தேசியவாதத்தை மீளவும் புத்துயிர் பெற வைத்துள்ளது.




அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் 2024ம் ஆண்டின் யூலை முதல் டிசம்பர் வரையான சுழற்சித்தலைமையை ஹங்கேரியின் பிரதமர் விக்ரர் ஒபன் ஏற்றுள்ள நிலையில் அதன் விளைவு களை எதிர்கொள்ளவும் வேண்டி உள்ளது. 'ஹங்கேரியர்கள் கலப்பு இனமல்ல நாங்கள் கலப்பு இனமாக மாறவும் இடமளியோம்' என்னும் ஹங்கேரியின் குடிசார் மக்கள் அமைப்பான பிடாஸ் கட்சியை கிறிஸ்தவ தாராண்மை வாதக்கட்சிக்கு எதிரான கட்சியாக 1993 முதல் தலைமைதாங்கி நடாத்தி ஹங்கேரிப் பிரதமராக 2010 முதல் விளங்கி 2021 இல் மத்திய வலதுசாரி ஐரோப்பிய மக்கள் கட்சியுடன் முரண்பட்டு அதிலிருந்து விலகி மீளவும் 2022 தேர்தலில் வெற்றி பெற்ற ஹங்கேரியின் விக்ரர் ஒபன் கடந்த வாரத்தில் ஐரோப்பிய ஒன்றிய தலைவர் என்ற நிலையில் அல்லாது ஹங்கேரியின் பிரதமர் என்ற அளவில் உக்ரேனுக்கும் அடுத்து ரஸ்யாவுக்கும் சென்று போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு வலியுறுத்தியதும் அல்லாமல் சீனாவுக்குச் சென்று கம்யூனிஸ்ட் ஆட்சிக் காலத்தில் இருதரப்பினரதும் நெருங்கிய நண்பராக விளங்கிய சீனாவின் மத்தியத்தாலேயே போர் நிறுத்தம் நடைமுறைச்சாத்தியமாகும் என்று சீனாவின் தலையீட்டை வேண்டியுள்ளார். அத்துடன் ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் சியார்ட்தோ பீட்தர் அவர்கள் 'நேட்டோ பாதுகாப்பு அமைப்பு சீனாவுக்கு எதிரான கட்டமைப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தை மாற்ற ஹங்கேரி அனுமதிக்காது' எனவும் கூறியுள்ளார்.



இதற்குப் பலம் அளிக்கக் கூடிய வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 12 நாடுகளைச் சேர்ந்த 84 ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி "ஐரோப்பியப் பாராளுமன்ற நாட்டுப்பற்றாளர் பாராளுமன்றக் குழுவை, முன்னாள் செக்கின் பிரதமர் ஆன்ரே பாப்பிஸ் மற்றும் ஆஸ்ரியாவின் தீவிர வலதுசாரிக் கட்சியான ஆஸ்ரியாவின் சுதந்திரக்கட்சியின் தலைவர் கேர்பட் கிளிக்கல் ஆகியோரையும் இணைத்து ஆரம்பித்துள்ளார். இத்தாலியின் தீவிர வலதுசாரித் தலைவர் மத்தேயு சல்வீனியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் இணைந்துள்ளனர். பிரான்சின் தீவிர வலதுசாரியான மரின் லூபெனும் இந்த அணிக்குப் பலம் சேர்த்துள்ளார். இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடைமுறைத்தன்மை அமெரிக்க அணிக்கும் ஐரோப்பிய அணிக்கும் இடையிலான மோதல்கள் சவால்கள் நிறைந்ததாகவே தொடரவுள்ளது.

பிரித்தானியாவின் கார்டியன் ஆங்கில நாளிதழில் காஸ் மிட அவர்கள் 12.07. 2024 இல் எழுதிய "ஐரோப்பிய தேசப்பற்று? விக்ரர் ஒபனின் புதிய ஐரோப்பிய ஒன்றியக் குழு தீவிர வலதுசாரிகளின் வெற்று வெற்றி" என்ற அரசியல் ஆய்வுக்கட்டுரை தெளிவாக்கியுள்ளது. பிரான்சின் மரின் லுப்பென் உடைய தேசிய கூட்டணியும் ஹங்கேரியின் பிட்ஸா கட்சியும் இணைந்த சக்தியாக இருப்பினும் ஐரோப்பிய தீவிர வலது சாரிகள் உடைவுகளுடன் இருப்பதால் ஒபன் தனிமைப்படுத்தப்படுவார் என்ற நம்பிக்கையை அளித்துள்ளது.



ஆயினும் அமெரிக்காவின் நேட்டோ அமைப்பின் 75 வது ஆண்டு நிறைவை நேட்டோ உறுப்புரிமையுள்ள 32 நாடுகள் இணைந்து வாசிங்டனில் கொண்டாடி" உக்ரேனுக்கு 43 பில்லியன் டொலர்கள் உதவியையும் எப் -16 போர் விமானங்கள் உட்பட நவீன ஆயுத வழங்கலையும் அறிவித்துள்ள சூழலில் ரஸ்யா அதனை தன்மேலான நேரடியான நேட்டோவின் யுத்தமாகவே கருதித் தான் பதிலளிக் கப் போவதாக அறிவித்துள்ளமையும் ரஸ்ய சீன வடகொரிய பாதுகாப்பு உடன்பாடுகள் வேகம் பெறுவதும், இந்தியப் பிரதமரின் ரஸ்ய வருகையும் ஆஸ்திரியாவுக்கு 41 ஆண்டுகளின் பின்னர் சென்றதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எல்லைப் பிரச்சினைகளில் புரிந்துணர்வுடன் சீன இந்திய உறவுகள் பலமடைய வேண்டுமென்று சீனா சென்றதும் அதற்கு முன்னர் சிறிலங்காவுக்கு வந்து சென்றதும் எல்லாமே கூட்டாண்மைகள் பங்காண்மைகள் வழி பொருளாதாரத்தை மையப்படுத்திய அரசியல் பரிணாம வளர்ச்சிகளாகப் பார்க்கப்பட வேண்டியவை



இந்நிலையில் கூட்டாண்மைகள் பங்காண்மைகள் வழியாகப் பொருளாதாரம் உலகெங்கும் குடிசார் மக்கள் அமைப்புக்களின் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் வழியாக சமகாலத்தின் அரசியல் செல்நெறியாவது சமகாலப் போக்காக உள்ளது.



ஈழத்தமிழர்கள் மேலான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இனஅழிப்பு அரசியலின் தோற்றமும் வளர்ச்சியும் எதிர்கால நோக்கும் ஈழத்தமிழர்களைச் சிறப்பாகவும் மலையகத் தமிழர்கள் இலங்கை முஸ்லீம் மக்களைப் பொதுவாகவும் அவர்களின் பொருளாதாரத்தை முடக்குவதால் நாளாந்த வாழ்வை அவர்கள் இழக்க வைப்பதையே தலைமை நோக்காகக் கொண்டுள்ளது.

***01.*** **1948ம் ஆண்டின் இந்திய பாக்கிஸ்தானிய வழியினரின் குடியுரிமை பறிப்பு பெருந்தோட்டத் துறையில் மலையக மக்களினதும் அனைத்துலக வர்த்தகத்தில் முஸ்லீம் மக்களதும் பங்களிப்பைத் தடுத்து நிறுத்தி இவர்களின் பொருளாதாரத்தை வீழ்த்துவதையே தலைமை நோக்காகக் கொண்டிருந்தமை வரலாறு.**

***02.*** **பின்னர் 1956 இன் தனிச்சிங்களச் சட்;டம் சிங்களம் தெரியாதவர்களுக்கு அரச வேலைகளை மறுத்து அவர்களின் பொருளாதாரத்தைச் சிதைப்பதுடன் தமிழர் தாயகச் சிங்களக் குடியேற்றங்கள் தற்போது இஸ்ரேலால் 42000 துப்பாக்கிகள் இஸ்ரேலியப் பெண்களுக்கு கடந்த அக்டோபர் 7 முதல் வழங்கப்பட்டு மக்களை ஆயுதமாக்குவதுபோல அன்றைய சிங்கள ஆட்சியாளர்களால் ஆயுதங்கள் வழங்கப்பட்டு ஆயுதமயமாக்கப்பட்டு தமிழர் தாயகத்திலேயே நில அபகரிப்பை கல்லோயா சிங்களக் குடியேற்றத்தினர் தமிழரைத் தாக்கித் தொடங்க வைத்து இன்று வரை நில அபகரிப்பும் இன அழிப்பும் தொடர்கிறது. ,**

***03.*** **1958இல் தமிழர் தாயகத்துக்கு வெளியே ஈழத் தமிழர்க்கு இலங்கைத் தீவு முழுதும் இருந்த இறைமையை அவர்களை இனப்படுகொலை செய்தும் அவர்கள் தொழிலாதாரங்களை கடைகளை கொள்ளையடித்து எரித்தும் அவர்களை யாழ்ப்பாண வன்னி அரசுக்கள் இருந்த தமிழர் தாயகத்துள் விரட்டியடித்து மட்டுப்படுத்தியது.**

***04.*** **1958 முதல் 1983 வரை கால்நூற்றாண்டு தமிழரின் தாயகப் பகுதிகளின் உட்கட்டுமானங்களை வாழவாதாரங்களைத் தொடர்ச்சியாக அழித்தல் சிறிலங்காவின் பொருளாதாரக் கொள்கையாக அமைந்தது.**

***05.*** **இந்த சிறிலங்காவின் பொருளாதார ஆக்கிரமிப்புக்கான இனவழிப்பில் இருந்து**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மக்கள் மருத்துவர் அர்ச்சுனா விடயத்தில் அரசாங்கம் எடுக்கும் முடிவே

# இலவச மருத்துவ சேவையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்



வைத்தியர்களைக் கைகூப்பிக் கும்பிட்ட காலம் மாறி இன்று வாய்விட்டுத் திட்டும் நிலைமையை- மருத்துவத்தை சேவையாகக் கருதாது பணம் ஈட்டும் மார்க்கமாக கருதுகின்ற வைத்தியர்கள் ஏற்படுத்தி விட்டனர்.

இன்று மக்கள் மனங்களில் மருத்துவமனை என்றால்அச்சஉணர்வு மாத்திரமேகாணப்படுகிறது. அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களை மதிக்காத நிலைமையும்-தனியார் வைத்தியசாலைகளில் பணம் கறக்கும் நிலைமையும் மாத்திரமே காணப்படுகிறதே தவிர மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.



இலங்கையினுடைய மருத்துவத் துறையில் பல குறைபாடுகள் கடந்த காலங்களில் காணப்பட்டன.குறிப்பாக தரமற்ற மருந்துகள் இறக்குமதியால் பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னர் பல உயிர்கள் காவு கொள்ளப் பட்டிருந்தன.

இவ்வாறு சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவத் துறைகளின் அசமந்தம் மற்றும் ஊழல் இலவச மருத்துவ சேவையை வெகுவாகப் பாதித்ததுடன்-அது ஏழை மக்களுடைய உயிர் களையும் காவு வாங்கியிருந்தது.

நாட்டினுடைய மருத்துவத் துறை அசுர வேகத்தில் நவீனமயமாகின்ற அதேவேளையில் தனியார் மருத்துவமனைகளும் நாளுக்கு நாள் உதயமாகின்றன. ஆனால் தொற்றா நோய்களால் பாதிக்கப்படும் நோயாளர்கள் அதிகரிக்கின்றனரே தவிர குறைந்த பாடில்லை.இது எதனால் என்பதனை சிந்திக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

இன்று வைத்தியர்கள் நோய் வராமல் தடுப்பதற்கான-முற்றாக குணப்படுத்துவதற்கான மார்க்கங்களை அல்லது விழிப்புணர்வுகளை விடுத்து நோயை தற்காலிகமாக கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளிலேயே இறங்கியுள்ளனர்.



உலகளாவிய ரீதியாக மருத்துவ மாபியாக்கள் இயங்கி வருவதனை ஒருபோதும் மறுக்க முடியாது.அந்த மருத்துவ மாபியாக்களை மக்களுக்கு இனங்காட்டி மக்களை காப்பாற்ற எவரும் தயாரில்லை என்ற நிலைமையே இதுவரை இருந்து வந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் கடந்த வாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வடக்கு மாகாணத்தில் இலவச சுகாதார சேவையில் நிலவிய -நிலவி வருகின்ற ஊழல் மோசடிகளையும்-சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளையும் வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தார்.

**சுபேசன்**

இதனால் வடக்கு மக்கள் சுகாதார துறை மீதும்-வைத்தியர்கள்மீதும் நம்பிக்கையை இழந்ததுடன்-மருத்துவ மாபியாக்களின் ஊழல்களை வெளியுலகிற்கு காட்டிய வைத்தியர் அர்ச்சுனாவை ஓர் நாயகனாக பார்த்து அவருக்கு பலத்த ஆதரவையும் வழங்கி வருகின்றனர்.



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற சம்பவம் நாட்டினுடைய வரலாற்றில் இதுவரை பதிவாகாத சம்பவம்.

திணைக்கள தலைவர்கள் தமக்கு மேல் நிலையில்இருக்கும்அதிகாரிகளுடையஉத்தரவுக்கு பணிவதே வழமை.ஆனால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் அவ்வாறு அடிபணியவில்லை.மாறாக மாகாண மட்டத்தில் இருந்து அமைச்சு மட்டம் வரை உள்ள ஊழல்கள்-மோசடிகளை சுட்டிக்காட்டினார்.

அத்தோடு பதில் மருத்துவ அத்தியட்சகராக நியமிக்கப்பட்டு மூன்றாவது நாள் வைத்தியசாலையில் பல வருடங்களாக மூடிக் கிடந்த விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தை திறந்து அந்த கட்டடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததுடன்-மேலும் பல அதிரடி மாற்றங்களை வைத்தியசாலையில் நிகழ்த்திக்காட்டியிருந்தார்.

இந்த அதிரடி மாற்றம் அதுவரை சுதந்திரமாக செயற்பட்ட வைத்தியர்களுக்கு இடையூறாக தென்பட பதில் வைத்திய அத்தியட்சகருடன் முரண்பட்டனர்-அவருடைய கருத்துக்களை ஏற்க மறுத்தனர்.

முரண்பாடுகள் வலுத்த நிலையில் அது கைகலப்பு அளவிற்கு மாறியதுடன் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவை மாற்றும் வரை தாம் வைத்திய சேவையை ஆற்ற மாட்டோம் என ஒரே நேரத்தில் வைத்தியசாலையின் 25வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்புச் செய்ததுடன்-இதனை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருந்தனர்.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரும் மாற்றத்தை விரும்பாத வைத்தியர்கள் பக்கம் நின்றனரே தவிர மாற்றத்தையும்-ஊழல் அற்ற வைத்திய சேவையையும் ஏற்படுத்த விரும்பிய மக்கள் நாயகன் அர்ச்சுனா பக்கம் நிற்கத் தவறினர்.

ஐந்து தினங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய சேவையில் இருந்து சகல வைத்தியர்களும் விலகிய போதிலும் தனி ஒருவராக ஏனைய சுகாதார பணியாளர்களுடைய ஒத்துழைப்போடு வைத்திய சேவையை ஆற்றியிருந்தார்.

### அந்த ஐந்து தினங்கள்

அவர் உணவையும்-உறக்கத்தையும் மறந்து மக்கள் சேவையை வழங்கினார்.

ஏனைய வைத்தியர்கள் மக்கள் நலனை எள்ளளவும் பொருப்படுத்தாத நிலையில் வைத்தியர் அர்ச்சுனா 60கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் சில கிராம மக்களுக்கு தனி ஒருவராக சேவையாற்றினார்.

அந்த சேவையே வைத்தியர் அர்ச்சுனாவை மக்கள் நேசிக்க காரணமாக அமைந்தது.

இது இவ்வாறிருக்க வைத்தியர் அர்ச்சுனாவை பதில் அத்தியட்சகர் பதவியில் இருந்து நீக்கும் முயற்சி மற்றும் அவர் மீது பொலிஸ் முறைப்பாடு செய்து கைது செய்யும் முயற்சியிலும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஈடுபட்டிருந்தார்.



கடமை நேரம் அல்லாத இரவு வேளையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமாற்றல் கடிதம் வழங்க முயன்றார் ஆனால் அது பலனளிக்கவில்லை.

அடுத்த சில மணி நேரங்களில் பொலிஸார் வைத்தியர் அர்ச்சுனாவை கைது செய்ய முயன்றனர். ஆனால் மக்கள் போராட்டம் வலுத்த நிலையில் பொலிஸார் கைது முயற்சியை கைவிட்டனர்.

இந்நிலையில் இதற்கு ஓர் முடிவு கட்டி நிரந்தரத் தீர்வைப் பெற எண்ணிய மக்கள் வைத்தியர் அர்ச்சுனாவே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக தொடர வேண்டும் எனவும்-ஊழல் வாதிகளை மருத்துவத் துறையில் இருந்து வெளியேற்றக் கோரியும் ஆயிரக்கணக்கில் திரண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக போராடியிருந்தனர்.

சாவகச்சேரியில் எந்தவொரு போராட்டத்திலும் அவ்வளவு மக்கள் திரண்டதில்லை. ஆனால்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# திருகோணமலை மாவட்ட எம்.பியானார் குகதாசன் ஒரு பார்வை

திருமலையான்

பாகம் I

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக சண்முகம் குகதாசன் இலங்கை பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (09) சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்துகொண்டுள்ளார். திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களுடைய இழப்பை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்காக விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது நிலையில் இருக்கின்ற சண்முகம் குகதாசன் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 07.02.2024 அன்று வெளியிடப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இன்றைய தினம் கூடிய பாராளுமன்ற அமர்வின்போது அவர் சபாநாயகரின் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமானம் செய்து கொண்டுள்ளார்.



திருகோணமலை நகரில் இருந்து கடலோரமண்டி வடக்கு நோக்கி நகரும் போது குச்சவெளிக்கும் புல்மோட்டைக்கும் இடையில் இருக்கும் திரியாய் என்ற அழகான சிற்றூரில் சண்முகம் தனபாக்கியம் தம்பதிகளுக்கு 1953 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 16 ஆம் திகதி பிறந்த குகதாசன் அவர்கள் அந்த திரியாய் மண்ணின் பொருளாதார அபிவிருத்தித் திட்டமிடலில் இளநிலைப் பட்டமும் (B.A.), அரச அறிவியலில் முதுநிலைப் பட்டமும் (M.A.), பயின்று பெற்ற முதல் பட்டதாரி ஆவார் என்பதோடு, வடக்கு கிழக்குத் தமிழர்களின் உரிமைகளை பெற்று எடுப்பதற்காக நடைபெற்ற போராட்ட வரலாற்றில், 1970 களின் இறுதிக் காலங்களில் டேவிட் ஐயா, மற்றும் டாக்டர் ராஜசுந்தரம் இணைந்து தொடங்கிய காந்தீயம் திருகோணமலைக்கு வந்த போது அதன் முதல் தலைவராக இருந்த "சிவஞானச் செல்வர்" செல்லப்பா சிவபாதசுந்தரம் ஐயா அவர்களின் பின்னர்1977 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை அரசாங்கத்தினால் காந்தீயம் தடை செய்யப்படும் வரை அந்த காந்தீயத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவராக கடமையாற்றினார்.

சண்முகம் குகதாசன் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தின் காந்தீய தலைவராக கடமையாற்றிய காலத்தில் இலங்கை முழுவதும் 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இன்னலுற்ற மலையகத் தமிழ் மக்களை கொண்டுவந்து குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கல்லம்பத்தை, மொறவெவப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பன்குளப்பகுதி, மற்றும் எல்லைக் காளிகோவில் பகுதி, அத்தோடு மூதூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புளியடிச் சோலைப் பகுதி, முதலிய இடங்களில் குடியமர்த்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் முன்னின்று உழைத்தார் என்பதோடு ஐம்பதற்கும் மேற்பட்ட காந்தீயப் பாலர் பாடசாலைகளையும் காந்தீயத்தின் மூலம் நடத்தி வந்தார் .

குகதாசன் அவர்கள் தலைமை வகித்த காந்தீய அமைப்பில் தொண்டர்களாக இயங்கிய பலர் காந்தீய தடையின் பின்னாளில் ஆயுதப் போராளிகளாகி தீவிரவாத அரசியலை கையில் எடுத்த போதும், சண்முகம் குகதாசன் அவர்கள் மிதவாத அரசியலுடனேயே தன்னை மட்டுப் படுத்திக் கொண்டாரே என்றாலும், இவரது மிதவாத அரசியலைப் பின்பற்றி வளர்ந்துவந்த திரியாய் இளைஞர்களில் பலர் தீவிர ஆயுதப் போரட்டங்களிலும் தங்களின் பங்களிப்புகளைச் செய்தார்கள் அந்த வகையில் இந்த குகதாசன் பிறந்த திரியாய் மண்ணே 1984 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 18 ஆம் திகதி அன்று எங்கள் திருகோணமலை மண்ணில் களமாடி மடிந்த சுப்பிரமணியம் நற்குணம் என்ற முதலாவது மாவீரரைக் கொடுத்து இருந்தது.

இலங்கை அரசாங்கத்தினால் காந்தீயம் தடைசெய்யப்பட்டு,அதன் தலைவராகிய டேவிட் ஐயா, மற்றும் செயலாளராகிய டாக்டர் ராஜசுந்தரம் அவர்கள் கைது செய்யப்பட, திருகோணமலை மாவட்ட காந்தீய தலைவரான சண்முகம் குகதாசன் அவர்களும் இலங்கை காவல் துறையால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்குப் பின்னர் ஆதாரத்துடன் எதையும் நிரூபிக்க முடியாத காரணத்தால் விடுதலையாக்கப்பட்டார்.

விடுதலையானாலும் தொடர் கண்காணிப்பில் இலங்கை காவல் துறையின் அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்த சண்முகம் குகதாசன் அவர்கள் 1983 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 23 ஆம் திகதி விடுதலை புலிகளால் இலங்கை ராணுவத்திற்கு எதிராக நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக்கலவரத்தினால், இலங்கைப் படைகளின் கண்காணிப்பில் இருந்த குகதாசனுக்கு ஏற்கனவே இருந்த உயிர் அச்சுறுத்தல்களின் காரணமாகவும் வேறு வழியின்றி அவர் தமிழ்நாட்டுக்கு சென்றார்.

அங்கே தமிழரசுக் கட்சியின் நிறுவனரான செல்வநாயகத்தின் மகன் சந்திரஹாசனுடன் இணைந்து, ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகம் (OfERR) என்ற அமைப்பைத் தமிழ் நாட்டில் பதிவு செய்தார். அந்த அமைப்பின் மூலம் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களால் உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வந்து, முகாம்களில் தங்கியிருந்த இலட்சக் கணக்கான இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் மறுவாழ்வு மற்றும் கல்வி வழங்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அந்த வகையில் அன்றைய கால கட்டத்தில் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த எம் ஜி இராமச்சந்திரனை, அந்த OfERR அமைப்பின் பிரதிநிதியாகப் பல முறை நேரில் சந்தித்து அந்த MGR என்ற மக்கள் திலகத்தின் மூலம்,

தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்த இலங்கை



தமிழ் அகதி மாணவர்கள் தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் மருத்துவம், பொறியியல், அறிவியல், தொழில் நுட்பம், வணிகம் மற்றும் கலைத் துறைகளில் பட்டப் படிப்புகளுக்குஅனுமதி பெறவும் மிகக் குறைந்த கட்டணத்தில் தம் கல்வியைத் தொடரவும் தமிழ் நாட்டு முதலமைச்சர் MGR மூலம் ஆவன செய்து அரும்பணி ஆற்றினார்.

இவ்வாறு ஆறு ஆண்டு தொடர்ச்சியான குகதாசனின்சிறப்பானபணியாற்றலினால்இந்தியாவிற்கு அகதிகளாக சென்ற இலங்கைத் தமிழ் மாணவர்களில் 180 மாணவர்கள் மருத்துவ படிப்பையும் 480 மாணவர் பொறியியல் படிப்பையும் 2000 மாணவர் பட்டப்படிப்பையும் பெற்றுக் கொண்டார்கள் என்பதோடு அந்த மாணவர்கள் கல்வியைத் தொடர ஐயா அவர்களது அந்த OFERR நிறுவனத்தின் மூலம் பண உதவியும் பெற்றுக் கொடுத்தார். இவரது இந்த உதவியினால் இந்தியாவின் தமிழ் நாட்டில் பட்டப்படிப்பை முடித்த பல ஆயிரம் ஈழத் தமிழ் இளைஞர்கள், சட்டத்துறை வைத்தியத்துறை அத்தோடு பொறியியல் துறை என்று இன்னும் பல தொழில்முறைத் துறைகளில் தமக்கென தனித்துவ வழிசமைத்து, உலகெல்லாம் பரந்து வாழ்கின்றார்கள் என்பதோடு, அவர்களில் சிலரது நிதி உதவி சண்முகம் குகதாசன் அவர்களினது நல்ல திட்டங்களுக்கு இன்றுவரை சிறப்பாக பயன்படுத்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வருமான ஊக்குவிப்பு

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்களின் வருமானப் பற்றாக்குறை பல துறைகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. இந்நிலையில் உணவுப் பாதுகாப்பின்மை, வறுமை மற்றும் போஷாக்கின்மை என்பன மேம்படவும் இது உந்துசக்தியாகியுள்ளது. இந்நிலையில் இம்மக்கள் மாற்றுத் தொழிலின் ஊடாக மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. இதனிடையே பெருந்தோட்டங்களில் காணப் படும் பயிரிடப்படாத நிலங்களில் நவீன விவசாய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.



இலங்கையில் குறைந்தபட்சம் 6.3 மில்லியன் மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், அவசியமான உயிர்காக்கும் உதவிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படாவிட்டால் மேலும் அவர்களின் நிலை மோசமடையும் என்றும் அண்மையில் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்க ளின் சர்வதேச கூட்டிணைவு எச்சரிக்கை விடுத் திருந்தது.

இதேவேளை 2.3 மில்லியன் குழந்தைகள் உட்பட 5.7 மில்லியன் மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுவதாக யுனிசெப்பின் அண்மைய அறிக்கை வலியுறுத்தி இருந்தது. மேலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 15.7 வீதமானவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கை சுட்டிக் காட்டி இருந்தது.

இதேவேளை பெருந்தோட்டப் பகுதிகளில் 51 வீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட பகுதிகளிலேயே அதிகளவானோர் இந்நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருப்பதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்திருந்தது.

பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகங்க



ளைச் சேர்ந்த குடும்பங்கள் நாளாந்தம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொண்டிருந்தன. இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல காரணங்களால் வறுமை நிலைக்கு ஆளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தை தாண்டியுள்ளதாக குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை வலியுறுத்தி இருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

நாட்டின் மொத்த சனத்தொகை சுமார் 2 கோடி 20 இலட்சமாகும். இந்த சனத்தொகையில் 2019 ஆகும்போது நூற்றுக்கு 11.9 வீதமானவர்களே வறுமை நிலையில் இருப்பதாக பதிவாகியிருந்தபோதும் தற்போது அந்த சதவீதம் நூற்றுக்கு 25 என்ற அளவுக்கு வந்துள்ளது. அதன் பிரகாரம் ஜனசவிய, சமுர்த்தி மற்றும் அஸ்வெசும போன்ற வறுமை நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களின் சதவீதம் 11.9 இல் இருந்து 25 என்ற அளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

### மறைமுக நடவடிக்கை

2019 காலப்பகுதியில் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருந்த வறிய மக்கள், நாட்டின் முழு சனத்தொகையில் 25 இலட்சமாக பதிவாகியிருந்தபோதும் தற்போது வறிய மக்கள் பிரிவுக்கு புதிதாக30 இலட்சம்பேர்இணைந்திருப்பதாகவும் குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது. இதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே அதிகரித்த வறுமை நிலை காணப்படும் நிலையில் இதற்கு முதலாளிமார்சம்மேளனத்தின் எதேச்சாதிகார போக்குகளே காரணமாகுமென்று பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஷ் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

முதலாளிமார் சம்மேளனம் தொழிலாளர்களை நெருக்கீடுகளுக்கு உள்ளாக்கிவரும் நிலையில் தேயிலைத் தொழிற்றுறையில் தொழிலாளர்களைக் குறைக்கும் மறைமுக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதனால் இன்று பெருந் தோட்டத்துறையில் சுமார் 70 வீதமான தொழிலாளர்கள் தொழிலின்றி அல்லல்படுகின் றனர். இலாபத்தை மட்டுமே மையப்படுத்தி செயற்படும் முதலாளிமார் சம்மேளனம் தொழிலாளர்களை பல வழிகளிலும் ஏமாற்றி வருவதாகவும் சந்திரபோஷ் குற்றம் சுமத்துகின்றார்.

நாட்டின் போஷாக்கு நிலைமைகள்



குறித்து நோக்குகின்றபோது அதுவும் திருப்தி தருவதாக இல்லை. இலங்கையில் 2021 ம் ஆண்டில் 12.2 சதவீதமாகக் காணப்பட்ட எடை குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 2022 இல் 15.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. தமது பிள்ளைகளுக்கு அவசியமான உணவை வழங்குவதில் பெருமளவான குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்ட நிலையில், பல காரணங்கள் சிறுவர்கள் தொழிலாளர்களாக மாறுவதற்கும் வழிசமைத்தன என்றும் சர்வதேச ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

பெருந்தோட்டப் பகுதிகளில் வருமானப் பற்றாக்குறை காரணமாக பல சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப் பட்டுள்ளனர். இது காலம் காலமாகவே இருந்து வருகின்றது. 2016 ம் ஆண்டின் தகவலுக்கமைய ஒப்பளவான சில ஆரோக்கியம் தொடர்பான விபரங்களை நோக்குகையில் அது பின்வருமாறு அமைந்துள்ளது. இதன்படி உயிருடன் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் இறந்தவை தேசிய ரீதியில் 10 ஆகவிருக்கையில் தோட்டப்புறங்களில் இது 13 ஆகவிருந்தது. தேசிய ரீதியில் 1000 குழந்தைகளில் பிரசவ காலத்தில் இறந்தவை 7 ஆகவிருக்கையில் தோட்டப்புறங்களில் இது 8 ஆகவிருந்தது.

இதுபோன்றே தோட்டப்புறங்களில் ஐந்து வயதுக்கும் குறைந்தவர்களிடையே வளர்ச்சி குறைந்தவர்கள் வீதம் 31.7 ஆகவும்,5 வயதுக்கும் குறைந்தவர்களிடையே குறை நிறை கொண்டவர்களின் வீதம் 29.7 ஆகவும், நிறையிழந்து செல்கின்றமை 15.1வீதமாகவும், உயரம் மற்றும் நிறை என்பவற்றுக்கிடையே ஏற்ற தொடர்பின்மை (BMI) வீதம் 22 ஆகவும் காணப்பட்டது. இவ்வனைத்து நிலைமைகளும் தேசிய வீதத்தைக் காட்டிலும் தோட்டப் புறங்களில் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய நாடுகளிடையே ஆகக்கூடிய குறை



போஷாக்கினை கொண்ட நாடுகளில் திமூர் லெஸ்தோ (26.9 வீதம்), ஆப்கானிஸ்தான் (26.8 வீதம்), இலங்கை (22.1வீதம்), பாகிஸ்தான் (22 வீதம்), மொங்கோலியா (20.5 வீதம்), வங்காளதேசம் (16.4 வீதம்), இந்தியா (15.2 வீதம்) என்றவாறு காணப்படுகின்றது. அவ்வாறான குறைபோஷாக்கு நிலையில் மாத்திரமன்றி ஏனைய சில குறிகாட்டிகளிலும் ஆசிய கண்டத்தில் இலங்கை பின்னிலையில் காணப் படுகின்றது. இதேவேளை இலங்கையின் சராசரி தேசிய நிலையில் இருந்தும்கூட, குறைந்த நிலையிலேயே இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் அதுவும் குறிப்பாக தோட்டப்புறங்களில் வாழும் மக்கள் காணப்படுவதனை அடையாளமாகக் கொண்டு அச்சமூகத்தினரின் குறை வாழ்க்கைத் தரத்தின் நிலைமை குறித்து அறிந்துகொள்ள முடியும் என்பது புத்திஜீவிகளின் கருத்தாகவுள்ளது.

### விவசாய அபிவிருத்தி

மேற்கண்டவாறாக உணவுப் பாதுகாப்பின்மை, வறுமை மற்றும் போஷாக்கின்மை போன்ற பல துறைகளிலும் பெருந்தோட்ட மக்கள் பின்னடைவு காண்பதற்கு அம்மக்களின் வருமானப் பற்றாக்குறை பிரதான இடம் வகிக்கின்றது. இந்நிலையில் அம்மக்களின் வருமான மேம்பாடு கருதி பல்வேறு தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதனடிப்படையில் கால்நடை வளர்ப்பு, பூக்கன்றுகள் வளர்ப்பு, கையடக்கத் தொலைபேசி அல்லது மின்னியல் உபகரணங்கள் பழுது பார்ப்பதற்கான பயிற்சிகள் மற்றும் உதவிகள் போன்ற பலவற்றையும் இம்மக்களுக்காக பெற்றுக்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# நோர்டிக் நாடுகளும் வியக்க வைக்கும் சமூக அமைப்பும்!

**பாகம் 4**

**அரசியலும் பாலினச்சமத்துவமும்:**

*1906இல் ஐரோப்பாவில் முதன் முதலாக அனைத்துப் பகுதிகளிலும் ஆண்-பெண் இரு பாலருக்குமான ஓட்டுரிமை மற்றும் தேர்தலில் நிற்கும் சம உரிமையினை ஃபின்லாந்து உருவாக்கியது. அடுத்த ஆண்டு நடைபெற்றத் தேர்தலில் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்று உலகின் முதலிடத்தை இதிலும் பெற்றுக் கொண்டது. 1926லேயே முதல் பெண் அமைச்சராக மீனா சீலன்ஃபா (Miina Sillanpää) உருவானார்.*



*(தமிழ்நாட்டில் (அன்றைய சென்னை மாகாணத்தில்), பெண்களுக்கான ஓட்டுரிமைக்கான தீர்மானத்தை நீதிக்கட்சி ஆட்சி 1921இலேயே நிறைவேற்றியதையும் இங்கே ஒப்பிட்டுக் கொள்வோம்!)*

*2000ம் ஆண்டில் டார்ஜா ஹாலேன் ஃபின்லாந்தின் முதல் பெண் ஜனாதிபதியாகவும் 2003இல் அன்னெலி யாட்டின்மகி (Anneli Jäätteenmäki) முதல் பெண் பிரதமராகவும் ஆனர். 2007இல் மாட்டி வான்ஹனன் (Matti Vanhanen) அமைக்கப்பட்ட அமைச்சரவையில் 12 பெண்களும் 8 ஆண்களும் அங்கம் வகித்து, ஆண்களை விட பெண்கள் அதிகம் இடம்பெறும் அமைச்சரவை அமைத்த நாட்டின் பெருமையினையும் ஃபின்லாந்து தட்டிச்சென்றது.*



*2019 டிசம்பரில் 34 வயதான பெண் சன்னா மரினா பிரதமரானதும் இன்னும் பல வரலாற்றுப் பெருமைகளை ஃபின்லாந்து பெற்றது. ஒட்டு மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 47% பெண்கள். உலகின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் இள வயது பெண் என்பது அதன் மகுடம். சன்னா மரினாவின் அமைச்சரவையில் 19 அமைச்சர்களில் 12 பெண்கள் அதிலும் 40 வயதிற்கும் குறைவானோர் என்பது நவீன உலகில் வியக்க வைக்கும் சாதனைதான். சன்னா மரினா அமைச்சரவை கூட்டணியால் உருவானது. பசுமைக் கட்சி, இடதுசாரி முன்னணி, சுவீடன் மக்கள் கட்சி, மையக்கட்சி என அனைத்துமே பெண்களின் தலைமை வகிக்கும் கட்சிகள் என்பதுதான், இந்த ஐந்து கட்சிகளின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் மூவர் 35 வயதிற்குக் குறைவானோர் என்பது கூடுதல் சிறப்பு.*

*2014இல் சுவீடனின் பெண்ணியக் கட்சி, நாடாளுமன்றத்திற்கு நுழைந்தது முதல், உலகின் முதல் பெண்ணியம் சார்ந்த வெளியுறவுக்*



**முனைவர் விஜய் அசோகன்,**
**கல்வியாளர்**

*கொள்கை அமைத்த நாடு என்ற பெருமையையும், உலகின் முதல் பெண்ணிய அரசாங்கம் அமைத்த நாடு சுவீடன்! அதாவது, தேசிய, சர்வதேசிய கொள்கை வகுப்பு, செயன்முறை, அரசாங்க நடைமுறை, அமைச்சரவை என அனைத்திலும் ஆண்-பெண் சமத்துவத்தை நிலைநிறுத்துவதில் உறுதிபூண்டுள்ளது. 2019இல் நடந்த தேர்தலில் 349 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 161 பெண் உறுப்பினர்கள் பெற்று ஐரோப்பாவில் அதிக எண்ணிக்கைக் கொண்ட நாடு என்ற பெருமையும் சேர்த்துப் பெற்று இருக்கிறது.*

*1994இல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டப் பொழுது, நோர்வே நாட்டில் நிலைப்பெற்றிருக்கும் ஆண்-பெண் சமத்துவச் சட்டங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதால் கெட்டுவிடுமோ? என நோர்வே நாட்டு ஆண்களும் பெண்களும் விவாதித்ததாக, Europeisering av nordisk likestillingspolitikk ('Europeanisation of Nordic equality policies') என்னும் புத்தகத்தை எழுதிய காதெரின் ஒல்ஸ்ட் குறிப்பிட்டுள்ளார். இவர் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் சமுதாயவியல் துறை பேராசிரியர்.*

*(https://sciencenorway.no/discrimination-eu-forskningno/the-eu-raises-the-standard-of-norwegian-gender-equality-policies/1554614)*

*நோர்டிக் நாடுகளில் சுவீடன், ஃபின்லாந்து, நோர்வே அரசியல் தலைமை கொண்டப் பட்டியலில் முன்னணியிலும் டென்மார்க் மற்றும் ஐசுலாந்து பின்தங்கியும் உள்ளன. முதல் பிரதமர் பட்டியலைப் பார்த்தால் நோர்வே நாட்டின் குரூ ஆர்லாம் (Gro Harlem Brundtland) 1981லும் ஃபின்லாந்து நாட்டின் அன்னெலி யாட்டின்மகி (Anneli Jäätteenmäki) 2003லும் ஐசுலாந்து நாட்டின் யோகன்னா சிகுரோர்டோட்டிற் (Jóhanna Sigurðardóttir) 2009லும் டென்மார்க் நாட்டின் ஹெல்லே தோர்னிங்க் (Helle Thorning-Schmidt) 2011லும் இடம் பெற்றுள்ளனர்.*



*ஐசுலாந்தின் யோகன்னா தான் உலகின் முதல் LGBTஐ ஏற்றுக்கொண்டு வாழும் முதல் தலைவர். ஃபின்லாந்தின் சன்னா மரினாவினை வளர்த்தவர்கள் தன்பாலின இணையர்.*

**அரசியல்-சமூகம்-பொருளாதார வளர்ச்சியின் ஆணிவேர் கல்வி:**

*ஃபின்லாந்து நாட்டின் கல்வித்துறையை அறிந்துக் கொள்ள விரும்புவோர், அந்த நாட்டின் இன்றைய காலச்செயற்பாடுகள் குறித்தான தேடலை மட்டுமே மேற்கொள்வர். 2023இல் நாம் காணும் ஃபின்லாந்தின் கல்வித்துறையின் ஆய்வினை நாம் பின்னோக்கிச் சென்று பல நூற்றாண்டுகளின் தொடர்மாற்றங்கள், அதுவும் குறிப்பாக, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எத்தகையச் சூழலில் எத்தகையதொரு ஆய்வினை மேற்கொண்டு, கல்வித்துறையை வடிமைத்துக்கொண்டே வந்தார்கள், எங்குமே தேக்கமடையாமல் தொடர்ந்தும் செழுமைப்படுத்திக்கொண்டே வருகிறார்கள் என்பதை தெரிந்துக்கொள்வது அவசியம் என்பதே இந்நூலின் மையப்புள்ளி!*



*கல்வித்துறையின் செயற்பாடுகள் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது, எத்தகைய பிணைப்பைக் கொண்டுள்ளது என்பதும் மிக முக்கியம்! அரசியல் அமைப்புகளின் சித்தாந்தமும், கல்வித்துறையிலும் மாணவ, மாணவியருக்கான பாடத்திட்டங்களிலும் அரசியல் கருத்துருவாக்கமும் ஜனநாயகத்தன்மையும் எத்தகைய பிணைப்பைக் கொண்டுள்ளது என்பதன் தாக்கமே நிகழ்காலச் சமூகம் கொண்டுள்ள அரசியல் அமைப்பிற்கான சாட்சியமாக விளங்குகிறது!*

*அதேபோல, மொழியால் பிணைந்திருந்தாலும், சுவீடன்-டென்மார்க் இடையிலான போர்கள், நோர்வே மீதான டென்மார்க் மற்றும் சுவீடனின் ஆக்கிரமிப்புகள், ஃபின்லாந்து மீதான சுவீடன் மற்றும் ருசியாவின் ஆக்கிரமிப்புகள் ஆகிய வரலாறு கடும் சவால்களை ஃபின்லாந்திற்கும் நோர்வே நாட்டிற்கும் வழங்கியபொழுதிலும், ஆக்கிரமிக்கப்பட்டவர்களின் சிந்தனையில் தேங்காமல் (colonized mindset), மீண்டெழுந்தார்கள். தங்களின் அரசியல் இறையாண்மைக்கும் தங்கள் இனத்தின் மொழிக்கும் தொடர்பு உள்ளதை ஆணித்தரமாக ஏற்றுக்கொண்டதன் காரணமாக, தாய்மொழியினை மீட்டெடுத்தலோடு தாய்மொழிக் கல்வியை வழங்கிவருவதிலும் உறுதியாக நிற்கின்றனர்.*

*இந்த வரலாற்றுப் பின்னணியைப் புரிந்துக் கொண்டால், இந்த நாடுகளில் தாய்மொழிக் கல்விக்கான ஆணிவேர் தேசிய மறுமலர்ச்சி, தேசக் கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பின்னபட்டிருப்பதையும் விளங்கிக்கொள்ளலாம். இவர்கள் தங்கள் இனத்திற்கான தாய்மொழிவழிக் கற்றலுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் தருகிறார்களோ, அதே அளவிற்கு தங்கள்*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பிரித்தானியா அரசியலுக்கு சவாலாக மாறியுள்ள முஸ்லீம் சமூகம்

வேல்ஸில் இருந்து அருஸ்

பிரித்தானியாவின் தேர்தல் முடிவுகள் என்பது மக்களின் விரக்தியின் வெளிப்பாடு என தெரிவித்துள்ளது அமெரிக்கவைத் தளமாகக் கொண்ட பொலிற்றிக்கோ என்ற ஊடகம். அதாவது ஒரு மாற்றத்துக்காக பிரித்தானியா மக்கள் வாக்களித்துள்ளனர். அரசியல் தொடர்பில் அவர்களின் ஏமாற்றத்தின் பிரதிபலன் தான் தொழிற்கட்சியின் அபாரமான வெற்றி.



மக்களின் நம்பிக்கையை சிதறடித்து, வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறியது. பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் கண்ட தோல்வி. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு போன்றவைவே பிரித்தானியா மக்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் தொழிற்கட்சி வெற்றியீட்டிய போதும் பிரித்தானியாவின் நிலைமை முன்னேற்றமானதாக கணப்படவில்லை. கடந்த சில வருடங்களாக வாழக்கைச்செலவு அதிகரித்தே செல்கின்றது. வரி அறவீடும் 1950களில் இருந்து மிகவும் உயர்வாகவே உள்ளது. சுகாதாரத்துறை தரமிழந்து வருகின்றது நோயாளர்கள் சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர். வீதிகள் கூட திருத்தப்படுவது குறைவாகவே உள்ளது. சிறைச்சாலைகள் நிரம்பியுள்ளன. சிறிய வழக்குகள் கூட நீதிமன்றத்திற்கு செல்ல ஆறு மாதங்கள் எடுக்கின்றன.



நீண்டகாலமாக கூறப்பட்டுவரும் மக்களின் நல்வாழ்வுத்திட்டங்கள் கூட நிறைவேற்றப்படவில்லை. நடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஊழல்கள் அதிகரித்துச் செல்கின்றது. நகரசபைகள் நிதி நெருக்கடிகளை ஒன்றன்பின் ஒன்றாக சந்தித்து வருகின்றன. சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இவற்றின் வெளிப்பாடுகள் தான் கடந்த ஜுலை 4ஆம் நாள் தேர்தலில் எதிரொலித்திருந்தது.




அதாவது கியர் ஸ்ராமருக்கு உடைந்து போன, நிதிஅற்றுவரண்டுபோனநாடையேவிட்டுச் சென்றுள்ளனர். இந்த நாட்டை மாற்றுவது ஸ்ராமருக்கு இலகுவானதாக இருக்கப்போவதில்லை. வாக்காளர்களுக்கும் இது தெரியும். தொழிற்கட்சியின் வாக்குறுதிகளின் முன்னுள்ள நிட்சயமற்ற தன்மையையும், தடைகளையும், அவர்களின் இயலாத்தமையையும் வாக்காளர்கள் அறிவார்கள். இருந்தபோதும் அவர்கள் பழமைவாதக் கட்சிக்கு வாக்களிக்க விரும்பவில்லை. ஆட்சியில் இருந்த கட்சி மக்களுக்கு எதனையும் செய்யவில்லை என்பதே அதற்கான காரணம்.



My support for Palestine

I have called for:

- The indiscriminate killing to stop immediately
- For Palestine to be declared an independent sovereign state immediately
- For the international community to step in and end the blockade and siege of Gaza immediately

Mohsin Hussain speaking in Full Council

Bradford Labour Group have:


- Spoken up in full council repeatedly from the very beginning of the conflict demanding an immediate and permanent ceasefire now
- Brought two motions to Full Council demanding an immediate ceasefire, debated in Full Council when no other party, including the independents even brought a motion to discuss
- Issued statements and used every opportunity in Full Council to raise the crisis in Palestine
- Attended vigils and spoken at rallies in support of an immediate ceasefire

Fact Check:

no other party in Bradford including the independents has taken more action in standing up for Palestine than your Bradford Labour team.

தொழிற்கட்சியின் வெற்றிகூட முழுமையானது அல்ல. அது 34 விகித வாக்குகளை தான் பெற்றிருந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 1.7 விகித அதிகரிப்பு மட்டுமே. பதிவுசெய்யப்பட்ட 48 மில்லியன் வாக்காளர்களில் 12.8 மில்லியன் மக்கள் அதாவது 40 விகிதமானவர்கள் வாக்களிக்கவிலில்லை. அதாவது மக்களுக்கு தேர்தலிலும், அரசியல்வாதிகளிலும், அரசியல் கட்சிகளிலும் உள்ள நம்பிக்கைகள் படிப்படியாக குறைந்துவருவதையே இது காட்டுகின்றது.

அதாவது பிரித்தானியா நாடாளுமன்றம் ஊழல் மிக்க மற்றும் தமக்கு தாமே சேவை (self-serving) செய்வதற்கான ஒரு இடமாகவே மக்கள் பார்க்கின்றனர். பிரித்தானிய மக்களின் இந்த நிலமைக்கு அப்பால் அங்கு வாழும் சிறுபான்மை மக்களும் பிரித்தானியாவின் அரசியல் கட்சிகளின் மீதும் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் மீதும் நம்பிக்கை இழந்ததையே இந்த தேர்தல் முடிவுகள் காண்பித்துள்ளன.




இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் பிரித்தானியாவில் வாழும் முஸ்லீம் மக்களிடம் ஒரு பெரும் மாற்றத்தை தோற்றுவித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு 80 விகிதமான முஸ்லீம் மக்கள் தொழிற்கட்சிக்கு தேசிய மட்டத்தில் வாக்களித்ததாக நம்பப்படுகின்றது. ஆனால் இந்த வருடம் அது 20 விகிதமாக குறைந்துள்ளது. சில தொகுதிகளில் இந்த விகிதம் மேலும் குறைவானது.

தென்லெஸ்செஸ்ரர் பகுதியில் 30 விகித முஸ்லீம் மக்கள் வாழ்கின்றனர். அங்கு தொழிற்கட்சியின் மிக முக்கிய வேட்பாளர் சுயேட்சை முஸ்லீம் வேட்பாளரிடம் தோல்வி கண்டிருந்தார். டெவிஸ்பெரி, பற்லி, பேர்மிங்கம் பகுதிகளிலும் முஸ்லீம் சுயேட்சை வேட்பாளர்கள் வெற்றிபெற்றிருந்தனர்.



இல்போட் பகுதியில் பிரித்தானியாவின் சுகாதாரத்துறை அமைச்சர் கூட 528 வாக்குகளாலேயே தன்னை எதிர்த்து நின்ற முஸ்லீம் சுயேட்சை வேட்பாளரை தோற்கடித்திருந்தார். பல இடங்களில் சில நூறு வாக்குகளால் தான் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் முஸ்லீம் வேட்பாளர்களை தோற்கடித்திருந்தனர்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## படுவேகமாக ... தொடர்ச்சி ...

**தங்கள் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்க ஈழத்தமிழர்கள் ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்தித் தங்களுக்கான 31 ஆண்டுகால நடைமுறையரசில் தாங்கள் பாதுகாப்பான அமைதியுடன் வாழ முற்பட்டதை பிரிவினை என்றும் பயங்கரவாதம் என்றும் திரிபுபடுத்தி தனக்கு ஆதரவான நாடுகளுடன் இணைந்து சிறிலங்கா 2009 மே மாதத்தில் முள்ளி வாய்க்காலில் இனஅழிப்பால் தமிழீழத் தேசத்தையே இனப்படுகொலைக்கு உள்ளாக்கி ஆக்கிரமித்து இன்று வரை படைபலம் கொண்டு தமிழர் தாயகத்தை அடிமைப்படுத்தி அதன் நிலத்தை வளத்தைக் கடலை வானைத் தனது சிங்கள பௌத்த நலன்களின்விரிவாக்கத்தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகிறது.**

இவை எல்லாம் சிறிலங்கா ஈழத்தமிழரின் பொருளாதாரத்தைச் சிதைப்பதையே தலைமை நோக்காகக் கொண்டு அன்றும் இன்றும் என்றும் தனது அரசியலைக் கட்டமைத்தது-அமைக்கிறது-அமைக்கும் என்பதை உறுதி செய்கிறது.

இன்றைய மாறிவரும் உலக அரசியலுடன் இணைத்து ஈழத்தமிழர் இதனைத் தடுக்க வேண்டுமென்றால் ஈழத்தமிழரின் பொருளாதாரத்தை அவர்களின் இறைமைக்கான பாதுகாப்புக் கவசமாகக் கட்டியெழுப்புவதிலேயே அதனைச் சாதிக்க முடியும்.

இதற்கு அரசியல் தீர்வுகளை உடன் பேசாத மதிப்புக்குரிய தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் உருவாக்க விரும்பிய மாற்றத்தை ஏற்பதற்கான அரசியல் கலாச்சாரத்தை ஈழத்தமிழ் மக்களின் குடிசார் மக்களின் பொது அமைப்பு தாயகத்துப் பொருளாதார வளங்களையும் தேவைகளையும், புலத்து வாழ் வில் உள்ள அனைத்துத் தமிழர்களது பொருளாதார வளங்களையும் தேவைகளையும் ஒருமைப் படுத்திக் கல்வி மற்றும் பயிற்சிகள் மூலம் இலாபம் பெறுவதற்கு உள்ள அறியாமை நீக்கலைச் செய்து இடைக்கால செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் நவீனத்துடன் இணைக்க வேண்டும். ஒருங்கமைக்கப்பட்ட ஈழத்தமிழரின் மூலத்தனம் மற்றும் மனித வலுப் பகிர்வு மூலம் வறுமை நீக்கல் என்பவற்றை வேகப்படுத்த வேண்டும்.

இரண்டையும் சமகாலத்தில் ஈழத்தமிழர் சமுதாயத்தின் சமுதாய மூலதனத்தையும் புத்தி ஜீவித் தனத்தையும் தொழில்நுட்ப அறிவியல் வளத்தையும் தன்னுடைய தேவைகளுக்கும் பயன் படுத்த நினைக்கும் நாடுகள் ஈழத்தமிழர்களின் இறைமைக்கான பாதுகாப்பையும் உறுதிப் படுத்த முன்வருவர் என்பதை ஈழ மக்கள் ஒவ்வொருவரும் மனதிருத்தி தீர்வுக்கான வழி ஈழத்தமிழர்களின் பொருளாதாரத்தை அவர்களுக்கான கவனமாகப் பலப்படுத்தவதே என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். ஈழத்தமிழ் இளையவர் பங்களிப்புக்களை மையமாகக் கொண்ட அனுபவசாலிகளின் ஆற்றல் பகிர்வுகள் நெறிப்படுத்தல்கள் இணைக்கப்பட்ட பொருளாதார ஒருங்கமைப்பு மூலம். ஈழத்தமிழரின் பொருளாதாரத்தை ஒருங்கிணைக்கப்பட்ட ஒருமைப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக மாற்றுவதன் வழி மட்டுமே இன்றைய உலகின் சிக்கலான அரசியல் முறைமைக்குள் ஈழத்தமிழரின் இறைமையைப் பாதுகாக்க முடியும். இது எந்த அரசியல் அமைப்புக்களுக்கோ அல்லது இயக்கங்களுக்கோ எதிரான இன்னொரு அரசியல் அணியாக இல்லாது உள்ள எல்லாப் பொருளாதாரப் பலத்தையும் அறிவுத் திறனையும் தொழில்நுட்ப ஆற்றலையும் ஈழத்தமிழ் தேச இனத்துக்கான உலகளாவியப் பொருளாதாரப் பலமாக அறிவாக மாற்றி ஈழமக்களுக்குச் சத்தியளிக்கும் பணியாகத் தொடர ஒவ்வொரு ஈழத்தமிழரும் செயற்பட வேண்டும் என்பதே இச்சிறு கட்டுரையின் பணிவான அழைப்பாக உள்ளது.

• • •

## நோர்டிக்... தொடர்ச்சி ...

நாட்டில் வசிக்கும் அனைத்து இனத்திற்கும் முன்னுரிமை வழங்கி வருகிறாகள். அதனாலேயே, தாய்மொழிக் கற்றலை தங்கள் நாட்டில் வாழும் எல்லா நாட்டினருக்கும் எல்லா இனத்தினருக்கும் பாரபட்சமின்றி கிடைப்பதற்கிணங்க மொழியியல் மனித உரிமை *(Linguistic Human Rights)* என்ற அளவுகோலில் பொதுமைப்படுத்தியுள்ளனர் இந்நாடுகள்.

நோர்டிக் நாடுகளின் இன்றைய வியக்க வைக்கும் பல சீர்த்திருத்தங்களுக்கும், கல்விச்சார் செயற்பாடுகளுக்கும் பல நூற்றாண்டுகளாக பரிணாம வளர்ச்சிப்பெற்று, விவாதிக்கப்பட்டு, ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு கால அரசியலினால் தேக்கமடைந்து, அதே காலக் கட்டத்தில் மீண்டும் மறுமலர்ச்சிப் பெற்று வந்துள்ளதையும் வரலாற்றுப் பக்கங்களில் இருந்தே விளங்கிக்கொள்ள முடியும்!

**தொடரும்**

## துருக்கியில் ... தொடர்ச்சி ...

ளது. இதன்மூலம் மலிவானகார்களை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். 2026 ஆம் ஆண்டு கார் உற்பத்திகள் ஆரம்பிக்கப்படும் என சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப் படும் கார்களுக்கு 17.4 விகித வரிகளை விதிப் பதாக ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தெரிவித்திருந்தது. அமெரிக்கா 100 விகித வரி உயர்வை அறிவித்திருந்ததும் நாம் அறிந்ததே. எனினும் துருக்கி ஐரோப்பிய ஒன்றிய நாடு அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வியட்னாமின் வின்பாஸ்ட் என்ற மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனம் இந்தோனேசியாவில் மிகப்பெரும் உற்பத்தி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான வங்கிக் கடனை கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

தப்பட்டு வருகின்றது என்பதே யதார்த்தம் ஆகும்.

குகதாசன் அவர்கள் தமிழ் நாட்டில் தங்கி இருந்த அதே காலத்தில் தனது OfERR நிறுவனத்தில் பணியாற்றிய தஞ்சாவூரைச் சேர்ந்த பத்மா என்ற பெண்ணை காதலித்து மணந்து ஆண் பெண் என இரு பிள்ளைகளுக்கு தந்தையாகி இருந்தாலும், தமிழ்தேசியத்தின்மீதும்தமிழ்மொழி மீதும் மாறாத பற்று கொண்டதனால் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தின் தேவையை வலியுறுத்தி அதனை அனைத்து இந்திய மக்களுக்கும் அறியப்படுத்த வேண்டும் என்பதற்காக சென்னையில் காந்தளகம் புத்தகநிலையம் வைத்திருந்த மறவன் புலவு சச்சிதானந்தத்துடன் பணியாற்றி அதன் மூலம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றையும் நடத்தினார்.

இதன் காரணமாக அன்றைய இந்தியாவின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட அரசின் கட்டுப்பாட்டில் இருந்த இந்திய உளவுத்துறையால் கண்காணிக்கப் பட்டார் என்பதோடு ஐயா அவர்களது அந்த ஆங்கிலப் பத்திரிகையும் இந்திய அதிகாரவர்க்கத்தினால் தடை செய்யப்பட்டதுடன், 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி நடைபெற்ற துன்பியல் சம்பவத்தின் பின்னரான காலத்தில் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழருக்கு எதிரான கெடுபிடிகள் அதிகரித்த வேளையில் குகதாசன் அவர்களை இந்தியா வெளியேறக் கூறியதை தொடர்ந்து கனடாவுக்கு வந்த குகதாசன் அவர்கள் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கத்தில் இணைந்து, அந்த சங்கத்தின் தலைவர், மற்றும் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் இருந்து இருபது ஆண்டுகள் பணியாற்றினார்.

இந்தக் காலப் பகுதியில் போராலும் இயற்கைப் பேரிடர்களாலும் இன்னலுற்ற திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு, கல்வி, வாழ்வாதாரம், முதலியன கிடைக்க அயராது உழைத்தார் என்பதோடு தனது திருகோணமலை மண்ணின் மீது மட்டும் தனது பற்றுறுதியினை மட்டுப் படுத்திக் கொள்ளாமல், தமிழ் தேசியத்தின் மீதும் தமிழ் மொழி மீதும் மாறாத பற்று கொண்டதனால், கனடாவில் வாழும், இலங்கைத் தமிழரது பிள்ளைகள், தமிழர் என்ற அடையாளத்தைத் தொலைக்காமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை இலக்காக்கி, அரச மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் வழியாகத் தமிழ் கல்வியை ஊக்குவித்தார் என்பதோடு, கனடாவில் தமிழ்க் கற்பிப்பதற்குப் பாடநூல் இன்மை பெரும் சிக்கலாக இருந்ததை உணர்ந்த குகதாசன் அவர்கள், இந்த சிக்கலை தீர்க்கும் பொருட்டாக கனடியக் கல்வி முறைக்கு அமையப் பாட நூல்களையும் பயிற்சி நூல்களையும் எழுதிக் கொடுத்து, கனடாவில் உள்ள தமிழ் பயிற்றுவிக்கும் நிறுவனங்களில் ஆசிரியர் அறிவுரையாளர், விரிவுரையாளர், மற்றும் துறைத் தலைவர் ஆகிய பதவிகளில் பணிபுரிந்து கனேடிய மண்ணில் தமிழ்க் கல்வியை தொடர்ந்தும் ஊக்குவித்தார்.

**தொடரும்...............**

## கலைந்தது ... தொடர்ச்சி ...

இந்தப் பின்னணியில் கடந்த புதன்கிழமை கூடிய தமிழரசுக் கட்சி நாடாளுமன்றக் குழு, இந்தப் பிரச்சினையை கையாளும் பொறுப்பை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவிடம் கொடுத்தது. இன்றைய தினமே நிகழ்நிலையில் கூடிய மத்திய குழு மூன்று விடயங்களைத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது.

**1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லாத பிற கூட்டணியில் தாங்கள் இடம்பெற்றிருக்கும் நிலையில் நாடாளுமன்றக் குழுத் தலைமைப் பதவியை ரெலோ அல்லது புளொட்டுக்கு வழங்க முடியாது.**

**2. இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் வழிநடத்தலின்படி கட்சி செயற்பட வேண்டும்.**

**3. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி குறித்த சர்ச்சை நீதிமன்றத்தில் இருப்பதால் அது குறித்த முடிவு வரும் வரையில் இந்த தலைமைப் பதவிப் பிரச்சினையில் கவனம் செலுத்த முடியாது.**

அதேவேளையில், தமிழரசுக்குப் போட்டியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தது ரெலோ தான். அதனால், செல்வத்துக்கு அந்தப் பதவியை ஒரு போதும் வழங்கக்கூடாது என்று தமிழரசின் ஆதரவாளர்கள் பலர் ஏற்கனவே குரல் கொடுத்திருந்தார்கள்.

இதில் மற்றொரு விடயமும் முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபரில் நடைபெறும். அதன் பின்னர் யார் வென்றாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் சாத்தியம் உள்ளது. ஆக, ஆறு மாதங்களுக்கு மட்டுமே கிடைக்கப்போகும் பதவிக்கா ரெலோ ஆசைப்பட்டது?

தவறான நேரத்தில் கள நிலைமைகளையும் தெரிந்துகொள்ளாமல் காய்களை நகர்த்திருக்கிறது ரெலோ. அதனால்தான் செல்வம் அடைக்கலநாதனின் கனவு தமிழரசினால் கலைக்கப்பட்டது!

• • •

## வருமான ... தொடர்ச்சி ...

கொடுப்பதோடு, தேவையேற்படின் இதற்கென வங்கிகளுடன் தொடர்பு கொண்டு குறைந்த வட்டியில் கடன்களை பெற்றுக் கொடுக்கவும் அரசியல் மற்றும் தொழிற்சங்கவாதிகள் முன்வரவேண்டும். சமூக நலன்விரும்பிகளும் இதில் இணைந்து கொள்ள முடியும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே மலையகப் பகுதிகளில் உணவுப் பாதுகாப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு பேராசிரியர் ஜயசிங்கவின் ஆய்வறிக்கைக்கு அமைவாக பெருந்தோட்டப் பகுதிகளில் பயிரிடப்படாத நிலங்களை தோட்ட கூட்டுறவு சங்கத்தின் ஊடாக பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியம் அங்கு வாழும் மக்களின் பங்களிப்போடு, நவீன மயமாக்கப்பட்ட விவசாய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தவுள்ளதென்று பெருந்தோட்ட மனிதவளஅபிவிருத்தி நிதியத்தின்தலைவர்பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார். மேலும் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் மலையக மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதி, கல்வி, சுகாதார மேம்பாடு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப்பகுதிகளில்காணப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் போஷாக்கு மட்டங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாரத் அருள்சாமி தெரிவித்திருக்கின்றார். இதேவேளை தோட்டப் புறங்களில் காணப்படும் தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கை கருதி அங்குள்ள இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும், இது அவர்களின் மாற்று வருமானத்துக்கு கை கொடுக்குமென்றும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வருகின்றமை நீங்கள் அறிந்ததேயாகும்.

இதனிடையே கிராமங்களில் வறுமையை ஒழிப்பதற்கு விவசாய புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி வளவ வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு காணியுறுதி வழங்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். காணியுரிமை கிடைப்பதால் மக்கள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பெருந்தோட்ட மக்கள் வருமானப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதோடு, காணியுரிமை இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்மக்களை காணியுரிமை மற்றும் வீட்டுரிமை உள்ளவர்களாக மாற்றிய மைத்து அவர்களுக்கு ஒளிமயமான வாழ்வினை ஏற்படுத்திக் கொடுக்கப்போவதாக கடந்தகாலத்தில் பல்வேறு வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன. எனினும் இவ்வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறாது காற்றோடு கலந்து விட்டதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில் கிராமப்புற மக்களில் காட்டப்படும் கரிசனையை பெருந்தோட்ட மக்கள் தொடர்பிலும் ஆட்சியாளர்கள் வெளிப்படுத்த வேண்டும். பெருந்தோட்ட மக்களை காணியுரிமை உள்ளவர்களாக மாற்றம் பெறச்செய்து அவர்களின் வருமான அதிகரிப்புக்கு வித்திடுவதோடு, வீட்டுரிமைக் கனவையும் நனவாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். இதிலிருந்தும் அவர்கள் விலகிச் செல்ல முற்படுதல் கூடாது.

• • •

## மக்கள் ... தொடர்ச்சி ...

மக்கள் மருத்துவர் அர்ச்சுனாவிற்காக பொதுமக்கள்-அரசியல் வாதிகள் என ஏராளமானோர் திரண்டு ஏ9வீதியை மறித்து போராடினர்.

இரவு 8மணிக்கு தொடங்கிய போராட்டம் நண்பகலை தாண்டியும் தொடர்ந்தது.

போராட்டம் ஒரு பக்கம் இடம்பெற மறுபுறம் மக்கள் மனம் கவர்ந்த மருத்துவரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் கச்சிதமாக அரங்கேற்றப்பட்டன.

மருத்துவரை மத்திய சுகாதார அமைச்சு பேச்சுவார்த்தைக்காக கொழும்பிற்கு அழைத்திருந்தனர்.

வைத்தியரும் அதனை நம்பி இருநாள் சுகயீன விடுப்பில் கொழும்பு சென்று மீண்டும் உங்கள் வைத்திய அத்தியட்சகராகவே வருவேன் என்ற நம்பிக்கையை மக்கள் மனங்களில் விதைத்திருந்தார்.

வைத்தியர் கூறிய அந்த ஒரு வார்த்தை போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மக்களை கட்டுப்படுத்தியது.

ஆனால் அன்று வைத்தியர் அர்ச்சுனா ஒரு வார்த்தை கூறியிருந்தால் நிலைமை தலைகீழாக மாறியிருக்கும். ஆனால் அவர் தனது அன்பான -உணர்வு பூர்வமான வார்த்தைகளால் மக்களை கட்டுப்படுத்தி விட்டு விடை பெற்றார்.

வைத்திய அத்தியட்சகருடைய வார்த்தையை தெய்வ வாக்காக எண்ணிய மக்களும் எந்தவொரு வன்முறையிலும் ஈடுபடாது வைத்தியரை கொழும்பிற்கு வழியனுப்பி வைத்தனர்.

அவ்வாறு மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டு தணிந்த மறுதினமே புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வேறொருவர் நியமிக்கப்பட்டார்.

அதுவும் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரால் அந்த நியமனம் செய்யப்பட்டது.

முதல் நாள் ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் புதிய அத்தியட்சகர் நியமனத்தின் போது எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை.ஆனால் அப்போதும் நம்பினர் அவர் சொல்லிச் சென்ற வார்த்தை மீது நம்பிக்கை வைத்து.ஆனால் ஒட்டுமொத்த மருத்துவ சமூகமும் மருத்துவர் அர்ச்சுனாவிற்கு எதிராக செயற்பட்டு அவரை முடக்குவதற்கான செயற்பாட்டில் மாத்திரமே ஈடுபட்டு வருகிறது.

ஒரு சில அமைச்சர்கள்-பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் மனதை வென்ற வைத்தியர் அர்ச்சுனா சார்பாக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்ற போதிலும் அவர் மீளவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்று வதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

இதனால் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வைத்தியருக்கு ஆதரவாகவும்-மருத்துவ மாபியாக்களுக்கு எதிராகவும் போராடியதற்கு எந்தவொரு பயனும் இல்லாமல் போய்விட்டது.

இன்று வைத்தியர் அர்ச்சுனாவால் குற்றம் சுமத்தப்பட்ட அதே மருத்துவ குழாமே தமக்கு எதிராக போராடிய மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கி வருகின்றனர்.

தமக்கு எதிராக போராடிய மக்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டிய கடப்பாடு வைத்தியர்களுக்கு-அதே நேரம் யாரை வெளியேறுமாறு கோஷமிட்டனரோ அந்த வைத்தியர்களிடம் போய் கைகட்டி நிற்க வேண்டிய இக்கட்டு நிலைமை மக்களுக்கு ஏற்பட்டு விட்டது.

எவ்வாறிருப்பினும் மருத்துவ மாபியாக்களை வெளி உலகிற்கு வெளிச்சமிட்டு காட்டியதுடன்-மனதிற்கு திருப்தியாக சேவை வழங்காத வைத்தியர்களுக்கு பயத்தை காட்டியவர் வைத்தியர் அர்ச்சுனா.

மக்கள் மருத்துவர் அர்ச்சுனா சுமத்திய அத்தனை குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்பட வேண்டியவை.

இலவசமருத்துவ சேவை புனிதமாக்கப்பட வேண்டும்.அதற்கு அர்ச்சுனா போன்ற மக்கள் நலனை சிரத்தில் கொண்டவர்களும்-தயக்கம் இன்றி முடிவை எடுக்கக்கூடியவர்களும் அவசியம். வைத்தியர் அர்ச்சுனாவிற்கு அரசாங்கம் கொடுக்கின்ற தீர்ப்பே அர்ச்சுனா போன்ற வைத்தியர்கள் உருவெடுப்பார்களா? இல்லை அடிபணிந்து எல்லாவற்றுக்கும் தலை அசைப்பார்களா? என்பதனை தீர்மானிக்கும்.

இலங்கையினுடைய மருத்துவ துறையில் ஊழலை ஒழித்து- இலவச மருத்துவ சேவையை மெருகேற்ற வேண்டுமானால் மக்கள் மருத்துவர் அர்ச்சுனாவை மீளவும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அத்தியட்சகராக நியமிக்க வேண்டும்.

மாறாக ஊழல்களும் -சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுடைய குற்றச்செயல்களும் மூடி மறைக்கப்படவும்-அவை தொடரவும் இடமளிக்க வேண்டுமானால் வைத்தியர் அர்ச்சுனா தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.இந்த விடயத்தில் மத்திய சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கம் எடுக்கும் முடிவே நாட்டினுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கும்.

வெறுமனே சமூக வலைத்தளத்தை மாத்திரம் பயன்படுத்தி ஓர் சாதாரண பதில் வைத்திய அத்தியட்சகர் ஒட்டுமொத்த நாட்டினையை சுகாதாரதுறையையும் ஆட்டங்காண வைத்துள்ளார் என்றால் அது பாராட்டத்தக்க ஒன்று.

வருடக்கணக்கில் அபிவிருத்தி காணாத சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை இன்று அர்ச்சுனா என்ற தனி மனிதன் ஏற்படுத்திய புரட்சியின் விளைவாக அபிவிருத்தியை காண ஆரம்பித்துவிட்டது.இவ்வாறான மாற்றங்களே எம் நாட்டில் ஊழல்களையும்-அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளையும் தடுக்க அவசியமானதாக உள்ளது.

• • •



## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 6.5 விகதமும், ஸ்கொட்லாந்தில் 2 விகிதமும், வடஅயர்லாந்தில் 1 விகிதமும் முஸ்லீம்கள் வாழ்கின்றனர். அதாவது 9.5 விகித மக்கள் தொகை என்பது பிரித்தானியாவின் தேர்தல்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

ஆனால் தற்போது பிரித்தானியாவில் உள்ள இரு கட்சிகளையும் விடுத்து தனியாக தேர்தல்களில் பங்கெடுக்கும் வியூகத்தை முஸ்லீம்கள் வகுத்துள்ளதையே இந்த தேர்தல் காண்பித்துள்ளது. எதிகாலத்தில் தனியாக முஸ்லீம் கட்சி ஒன்று உருவாகும் நிலை ஒன்று எற்பட்டால் அது பிரித்தானியாவின் அரசியலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

நையல் பெராஜ் உருவாக்கிய றிபோம் கட்சி 14 விகித வாக்குகளை பெற்று மூன்றாவது பெரும் கட்சியாக உருவாக்கியது போன்றதொரு நிலை அது.

முஸ்லீம்களின் இந்த நடவடிக்கை பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். யூத மக்களின் தொகை பிரித்தானியாவில் 0.5 விகிதமாக உள்ளபோதும் முடிவுகளை எடுக்கும் உயர்மட்டத்தில் அவர்கள் இருப்பதால் இரண்டையும் சமநிலைப்படுத்தி நகரவேண்டிய ஒரு கடினமான பதை ஒன்றை இந்த தேர்தல் தொழிற்கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது.

அதாவது முஸ்லீம் மக்களின் பிரச்சனைகளில் பிரித்தானியாவால் வருங்காலங்களில் கடும் போக்கை கடைப்பிடிப்பதில் பல தடைகள் ஏற்படலாம். எனவே தான் தேர்தல் முடிவுற்ற கையுடன் கருத்து தெரிவித்த புதிய வெளிவிவகார அமைச்சர் காசாவில் உடனடியான போர் நிறுத்தம் வேண்டும் எனவும், இரு தேசங்கள் என்ற அடிப்படையான தீர்வை தாம் உறுதியாக ஆதரிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அதேபோல இந்திய வம்சாவழியினர் 28 பேர் இந்த தேர்தலில் வெற்றிபெற்றுள்ளதுடன், அதில் ஒரு டசினுக்கு மேற்பட்டவர்கள் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சீக்கிய இனத்தவர்கள் மீதான இந்தியாவின் வன்முறை தொடர்பில் கனடா மற்றும் அமெரிக்க அரசுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ள அதேசமயம் பிரித்தானியாவின் அரசியலிலும் சீக்கிய மக்களின் பங்களிப்பு என்பது அமெரிக்காவின் வழியில் செல்லும் பிரித்தானியாவின் வெளியுறவுக்கு கொள்கைகளை மேலும் பலப்படுத்துவதாகவே அமையும்.

இந்த நிலையில் தற்போது இடம்பெறும் ரஸ்ய-உக்ரைன் போர் மற்றும் பாலஸ்தீன இஸ்ரேல் போர் அதன் தொடர்ச்சியக குதீஸ் அமைப்பினர் செங்கடல் பகுதியில் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் என்பன பிரித்தானியாவின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துவருகின்றது. எரிபொருட்களின் விலையேற்றம் மக்களை கடுமையாக பாதித்துவருகின்றது.

ஆனால் குதீஸ் அமைப்பினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் தற்போது துல்லியமாகத் தாக்கும் நீண்டதூர ஏவகணைகளை பயன்படுத்திவருவதால் ஐரோப்பிய நாடுகளின் பணவீக்கத்தை அதிகரிப்பதுடன், வாழக்கைச் செலவையும் அதிகரிக்கும் என பிரித்தானியாவின் த ரெலிகிராப் நாளேடு தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு வழங்கப்படும் நிதி உதவி, ரஸ்யாவின் மலிவான் எண்ணை மீதான தடை, இஸ்ரேலுக்கான உதவிகள் என உலகின் புறச்சூழல்களும் புதிய பிரித்தானியா அரசுக்கு சாதகமாக இல்லை என்பதுடன், அண்மையில் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெற்ற தேர்தல்களின் முடிவுகளும் பாதகமானதாகவே பார்க்கப்படுகின்றது.

அதேசமயம் பிரித்தானியாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் முஸ்லீம் மக்கள் எடுத்த தேர்தல் முடிவுகளை அவர்கள் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள தேர்தலிலும் கடைப்பிடித்தால் மேற்குலகத்தின் நிலை மேலும் மோசமடையலாம். அது ஸ்ரமரின் நடவடிக்கைகளையும் பதிக்கலாம். அதாவது பிரித்தானியாவின் புதிய அரசு மிகப்பெரும் சவால்கள் நிறைந்த பாதையினுடாகவே பயணத்தை ஆரம்பித்துள்ளது. அதனை இலகுவாக்குவதும், மேலும் கடினமாக்குவதும் அவர்களின் நடவடிக்கையில் தான் தங்கியுள்ளது.

• • •

## மகளிர் மற்றும் ... தொடர்ச்சி ...

பட்ட சி.சி.ரி.வி கமராக்கள் தொடர்பிலும், பதிவு செய்யப் படாத சிறுவர் இல்லம் தொடர்பிலும்அபயம்பிரிவிற்குமுறைப்பாடுகிடைத்தது. அபயம் பிரிவினரால் கோரப்பட்டதற்கு அமைய தெல்லிப் பளை பிரதேச செயலாளரால் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு, களவிஜய விசாரணை அறிக்கை சமர்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கைகளின் பிரகாரம் தெல்லிப்பளை பகுதியில் இயங்கும் குறித்த இரண்டு இல்லங்களையும் மூடுமாறும், விடயம் தொடர்பான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்திற்குள் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளை பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## ரஸ்யா தொடர் ... தொடர்ச்சி ...

ரஸ்யாவின் நிதியை பயன்படுத்துவது தொடர்பில் பிரித்தானி யாவும், அமெரிக்காவும் தான் அதிக முயற்சிகளை எடுத்துவருகின்றன. பெருமளவான நிதி ஐரோப்பாவில் தான் உள்ளது. இந்த முயற்சி ஐரோப்பிய நாணயமான ஈரோவுக்கு பெரும் பின்னடைவை கொண்டுவரும் என ஐரோப்பா அஞ்சுகின்றது.

சவுதிஅரேபியாவின் நிதி அமைச்சே தனிப்பட்ட முறையில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. பிரான்ஸில் உள்ள பிணை முறிகளையே சுவுதிஅரேபியா விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

எனினும் இது குறித்து கேள்வி எழுப்பிய போது தாம் அவ்வாறு கூறவில்லை என சவுதியின் நிதி அமைச்சகம் மறுத்துள்ளது. ஜி-7 நாடுகளுடன் தாம் வலுவான பொருளாதார உறவுகளை பேணுவதாகவும், உலகின் பொருளாதார வளர்ச்சி குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் சவுதி தெரிவித்துள்ளது.

எனினும் சவுதிஅரேபியா தனிப்பட்ட முறையில் இந்த எச்சரிக்கையை உத்தியோகப் பற்றற்ற முறையில் விடுத்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் சவுதிஅரேபியா 135 பில்லியன்டொலர்கள்பெறுமதியானபிணைமுறிகளை வைத்திருக்கின்றது. ஐரோப்பாவிலும் தொகை குறிப்பிடப்படாத பிணைமுறிகளை அது கொண்டுள்ளது. சவுதியின் இந்த நடவடிக்கையை ஏனைய நாடுகளும் பின்பற்றினால் ஜி-7 நாடுகள் கடுமையான பாதிப்பை சந்திக்க நேரிடலாம் என கூறப்படுகின்றது.

## இரண்டாவது ... தொடர்ச்சி ...

ஆட்சியாளர்கள் இயங்கியுள்ளனர்.

நாட்டை பின்னுக்கும், தமது கட்சியை முன்னுக்கும் வைத்து ஆட்சி புரிந்துள்ளனர். கடந்த ஆண்டு மாட்டும் 53 பில்லியன் பவுண்களை வரி அறவீடுகளில் இழந்துள்ளது. இந்த நிதிய வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு பயன்படுத்தியிருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 1960 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் பிரித்தானியா கடுமையான நிதிப் பற்றாக்குறையை சந்தித்துள்ளது. பிறக்சிற், கோவிட்-19 நெருக்கடி மற்றும் போர்கள் என்பன பிரித்தானியாவின் பொருளாதாரத் தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக த கார்டியன் பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் பிரித்தானியாவின் பொருளாதாரம் 0.5 விகித வளர்ச்சியையே காணும் என அனைத்துலக நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

## கொக்குத் தொடு ... தொடர்ச்சி ...

நாளாகவும் ஐ.நா. சபையின் இலங் கைக்கான பணிமனையின் மனித உரிமைகள் பணியாளர் செல்ரின் அகிலனும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்.

கொக்கிளாய் – முல்லைத்தீவு பிரதான வீதியின் கீழாக தோண்டப் பட்டிருந்த இந்தப் பகுதியில் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், துப்பாக்கி சன்னங்கள், இராணுவ முகாம்களில் பயன் படுத்தப்படும் வேலிக் கம்பிகளின் துண்டு கள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்று அடையாளம் காணப்பட்ட 3 மனித எலும்புக்கூட்டு எச்சங்களுடன், இரண்டாம் கட்ட அகழ்வாய்வில் அடையாளம் காணப்பட்ட 4 மனித எலும்புக்கூட்டு எச்சங்களையும் சேர்த்து 7 எலும்புக்கூடுகளும் வரும் நாட்களில் முழுமையாக வெளியே எடுக்கப்படும் என்று தொல்லியல் திணைக்கள பேராசிரியர் ராஜ் சோமதேவ, மனித உரிமைகள் சட்டத்தரணி நிரஞ்சன் ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

முன்னதாக, இரு கட்டங்களாக நடத்தப் பட்ட அகழ்வு பணிகளில் 40 மனித எலும்புக்கூடு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது.

## நவாலி இனப் ... தொடர்ச்சி ...

முன்னோக்கி பாய்தல் என்ற படை நடவடிக்கையை அன்று ஆட்சியில் இருந்த இலங்கை அதிபர் சந்திரிக்கா குமாரணதுங்காவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. சரமாரியாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதல்களில் இருந்து உயிர்களை காக்கும் நோக்கத்துடன் வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த பெருமளவான மக்கள் தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந் திருந்தனர்.

அவ்வாறு தஞ்சமடைந்திருந் தவர்கள் மீதே இலங்கை வான்படையின் புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியிருந்தன. இந்த சம்பவத்தில் 145 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், பல நூறுபேர் காயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அனைத்துலக ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிட்ட அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளையும் இலங்கை அரசு நாட்டைவிட்டு வெளியேறுமாறு பணித்திருந்தது. இந்த படுகொலைக்கான நீதி இன்றுவரை கிடைக்கவில்லை.

## வைத்தியதுறை ... தொடர்ச்சி ...

குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. மருத்துவமனைகளில் மட்டுமன்றி அரசாங்க நிர்வாகத்திலேயே இவ்வாறான நிலை இருக்கின்றது. இந்த நிலையில், உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு தீர்வு கிடைக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.

ஆனால், சாவகச்சேரி பகுதி மக்கள் மட்டுமல்ல, வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மக்களுமே போராட்ட மனோ நிலையில் இருக்கின்றார்கள் என்பது வெளிப்பட்டுள்ளது. அரசியல் உரிமை இல்லை என்பதற்கு அப்பால், அங்கிருக்கக்கூடிய ஊழல் மோசடிகள் மற்றும் அசமந்தப் போக்குகளால் மக்கள் விரக்தியடைந்திருக்கின்றார்கள். இந்த நிலைமைக்கு அங்குள்ள மக்கள் மட்டும் காரணமல்ல. கொழும்பை மையமாகக்கொண்ட அரசுதான் இதற்குக் காரணமாக இருக்கின்றது. ஆக, அரச கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்யாமல், இந்த ஊழல் மோசடிகளை விசாரணை செய்து மக்களுக்கு நீதி கிடைக்கும், அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

**மக்கள் ஆரம்பித்த போராட்டம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் ஒரு மக்கள் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்குமா?**

வடக்கு கிழக்கில் இவ்விதம் மக்கள் போராட்டங்கள் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. அரசாங்கம், அரசாங்க கட்டமைப்பில் இருக்கக்கூடிய அதிருப்தி என்பது வேறு. அரசியல் விடுதலை, அரசியல் உரிமைகள் கிடைக்கவில்லை என்பது வேறு. அதனைப் பெற்றுக்கொடுப்பதாகச் சொல்லும் தமிழ்த் தேசியக் கட்சிகளிலும் தமிழ் மக்களுக்கு அதிருப்தி இருக்கின்றது. அதன் காரணமாகத்தான் பொதுவேட்பாளர் என்ற நிலைக்குத் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் சென்றிருக்கின்றன. அங்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒரு போராட்ட மன நிலையில் இருக்கின்றார்கள் என்ற தகவலை சாவகச்சேரி போராட்டம் எடுத்துக் காட்டியிருக்கின்றது. அதனால், எதிர்காலத்திலும் இவ்வாறான போராட்டங்கள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கும்.

சாவகச்சேரிப் போராட்டத்தினால் ஒரு நல்ல விடயம் நடைபெற்றிருக்கின்றது. அது என்ன வென்றால், அரச அலுவலகங்களில் இடம்பெறக் கூடிய ஊழல் மோசடிகள் மற்றும் அசமந்தப் போக்கில் மாற்றம் ஏற்படலாம். அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு அவ்வத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்கள் தங்களை அம்பலப்படுத்துவார்கள், சமூக வலைத்தளங்கள் இந்த விடயங்களை வெளிக்கொண்டு வரும் என்ற அடிப்படையில் இவ்வாறான அசட்டையான போக்கு, மோசடிகள் குறையக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. விசாரணைகளைவிட இயல்பாகவே இவ்வாறான சம்பவங்கள் குறையக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

• • •

## மக்களுக்கு... தொடர்ச்சி ...

வைத்தியசாலைகளில் இல்லாத பௌதீக வளங்கள் சாவகச்சேரியில் இருக்கின்றன என்பதையும், அவற்றில் புறாக்கள் குடித்தனம் நடத்தி வருவதையும்அவர்உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

குறித்த வைத்தியசாலை 200 மில்லியன் ரூபாய் களை ஏப்பமிட்டுவிட்டு பயனற்று கிடக்கின்ற விபத்து மற்றும் அவசர சேவை பிரிவை செயற்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக கௌரவ ஆளுநரினால் அமைக்கப்பட்ட குழுவில் ஒருவனாக அங்கு சென்றபோதே அங்கிருந்த பௌதீக வளங்கள் தன்னை வியக்க வைத்தாக வைத்தியர் வினோதன் கூறியுள்ளார்.

யாழ்மாவட்டத்தில் இயங்கும் இந்த படித்த மக்களை ஏமாற்றும் மருத்துவத் துறையினால் அதனை எதிர்த்த பலர் இடம் மாற்றம் மூலம் தென்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அதில் ஒருவர் தான் வைத்தியர் உமாபதி. இன்றும் உமாபதியின் சிகிச்சைக்காக தமிழர்கள் அவர் பணியாற்றும் தென்னிலங்கைக்கு 250 மைல்கள் தாண்டிச் பணத்தை தமது நேரத்தை செலவிட்டு செல்கின்றனர்.

அதாவது சேவை மனப்பாண்மையுள்ள வைத்தியர்களை சிங்கள மக்களுக்கு சேவை செய்ய அனுப்பிவிட்டு பணத்தை கொள்ளையடிக்கும் கும்பல் ஒன்று வடபிராந்திய மருத்துவத்துறையை கைகப்படுத்தி பல மக்களின் மரணத்திற்கும் தமிழ் மக்களின் பொருளாதார அழிவுக்கும் காரணமாக இருக்கின்றது என்ற கசப்பான உண்மையை நாம் கடந்து செல்ல முடியாது.

அதாவது சொந்த இனத்தின் கோடரிக் கம்புகளிடம் இருந்த மக்களைக் காப்பாற்ற அவ்வப்போது சில அர்ச்சுனாக்களும் தேவை என்பதையே சாவகச்சேரியில் திரண்டிருந்த பெரும்பாலான மக்களின் கருத்தாக இருக்கின்றது.

சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரத்தில் கிடைத்த எமக்குத் தேவையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான செய்தி என்னவென்றால், மக்கள் வீதிக்கு வரவும் போராடவும் தயாராகவே இருக்கிறார்கள். வழிகாட்டத்தான் ஆளில்லை.

எமக்கு இந்தச் செய்தி போதும். வரலாறு ஒரு நாள் இன அழிப்பு அரசிற்கு எதிராகவும் மக்களை வீதிக்கு வர வழைக்கும். நம்பிக்கையோடு காத்திருப்போம். விடுதலையை வென்றெடுப்போம். அதற்கு முன்னர் எமது தேசத்தை சுத்தம் செய்வோம். எமது மக்களை காப்பாற்றுவோம்.

• • •

## பண்ணையாளர் ... தொடர்ச்சி ...

குடியேற்றங்களை செய்வதற்கு முற்படுவதற்கான ஆரம்பமாகவே கருதப்படுகின்றது.

குறிப்பாக ஒரு மாவட்டத்தினை உருவாக் கக்கூடிய நிலப்பரப்பாக மயிலத்தமடு,மாதவனை பகுதி காணப்படுவதுடன் எல்லைப்பகுதியில் குடியேற்றங்களை செய்வதற்கான ஏதுவான நிலைகள் அரசுக்கு காணப்படுகின்றது.அதன்காரணமாகவே போராட்டத்தினை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் சர்வதேசத்திற்கும் போராட்டத்தினைமுடித்துள்ளதாககாட்டமுடியும், சிங்கள குடியேற்றத்தினையும் சூட்சுமாக முன்னெடுக்கமுடியும். இதன்காரணமாக பலரை பண்ணையாளர்களின் போராட்டத்தினை நிறைவு செய்வதற்கு தூண்டுவதற்காக அரசு களமிறக்கியுள்ளது.

எவ்வாறாயினும் தமது பிரச்சினைக்கு தாங்கள் மட்டுமே போராடிவரும் நிலையில் தொடர்ந்து இந்த போராட்டத்தினை முன்கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாக பண்ணையாளர்கள் தெரிவித்துவரும் கருத்துகளும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஆபத்தானதாகவே அமையப்போகின்றது.

பண்ணையாளர்களின் போராட்டத்தினை குழப்பவேண்டும், முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் இராஜதந்திரரீதியாகவும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ். சிவயோகநாதன் தெரிவிக்கின்றார். 300வது நாளை தாண்டி நடைபெறும் இந்த போராட்டத்தினை மகாவலி பி வலயம் ஊடாக பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நரித்தந்திரமான நாடகத்தினை அரசு முன்னெடுத்துவருகின்றது.

பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கவேண்டுமானால் மகாவலி பி வலயத்திற்கு வெளியே அவர்களது பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படவேண்டும்.மகாவலி திட்டத்தின் ஊடாக பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் என்பது வினோதமான விடயமாகும். மகாவலி பி வலய திட்டம் என்பது முற்றுமுழுதான குடியேற்ற திட்டமாகும். இதன்மூலம் தமிழர்களின் இன விகிதாசாரத்தினை மாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவித்தார்.

பண்ணையாளர்களின் போராட்டத்தினை வெறும் மேய்ச்சல் தரைக்கான போராட்டமாக பார்க்காமல் இந்த மாவட்டத்தினை பாதுகாப்பதற்கான போராட்டமாக மாற்றுவதற்கானசெயற்பாடுகள்முன்னெடுக்கப்படவேண்டும். மகாவலிபிவலயம்கொண்டுவரப்படுமானால்அது முற்றுமுழுதாக தமிழர்களுக்கான நன்மைபயக்கும் திட்டமாக இருக்குமானால் அவற்றினை நடைமுறைப்படுத்த அனுமதியளிக்கவேண்டும்.

இல்லாதுவிட்டால் அந்த திட்டத்திற்கான எதிர்ப்பினை முழுமையாக வெளிப்படுத்துவதன் மூலமே அவற்றினை தடுத்து நிறுத்தமுடியும். அவ்வாறு இல்லாவிட்டால் முல்லைதீவு மாவட்டத்தின் மணலாறு பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியேற்ற திட்டம்போல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் முன்னெடுக்கும் நிலையுறுவாகும். எனவே இந்த விடயத்தில் தமக்குள் உள்ள அரசியல்வேறுபாடுகளை மறந்து அனைத்து தமிழ் தேசிய சக்திகளும் ஒன்றுபட்டு செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

• • •

## மேலும் ஆயுத ... தொடர்ச்சி ...

உக்ரைனுக்கு தேவையான நவீன ஆயுதங்கள் உடனடியாக வழங்கப்படும், உக்ரைன் முன்னனி அரங்கில் போரிடும் வல்லமையுடன் முன்னேறும், எந்தக் காலத்திலும் இல்லாதவாறு தற்போது நேட்டோ பலமாக உள்ளது என அவர் மேலம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் ரொமேனியா ஆகிய நாடுகள் ஏவுகணைகளையும், நோர்வே எப்-16 விமானங்களையும், ஏவுகணைக் குரிய பாகங்களை நெதர்லாந்தும் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தாலி சாம்பி-ரி என்ற வான்பாதுகாப்பு ஏவுகணையை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. எதிர்வரும் வருடத்திற்கு இடையில் நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ஹங்கேரியின் பிரதமர் விக்டர் ஒபன் உக்ரைன், ரஸ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு சென்று அமைதி முயற்சிகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுத்துவரும் நிலையில் அதற்கு எதிராக ஆயுதவினியோகத்தை நேட்டோ வழங்குவது இந்த போர் மிகப்பெரும் மோதலாக மாறும் சாத்தியங்களை ஏற்படுத்தும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.